பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir


விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 09 புதன்கிழமை 25.07.2018 கதிர் 261

இனி து ரகசியம் அல்ல!

மஹிந்தராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, சம்பந்தன் - இந்த மூவருக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 'எதிர்பாராத' சந்திப்பு கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தியிருப்பதாக நேற்று அறிய முடிந்தது. பக்கம் 03

# பலாலியில் காணிகளைப் படையினர் சட்டத்துக்கு மாறாகவே சுவீகரிப்பு

## எழுத்தில் தெளிவுபடுத்துகிறார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஜூலை 25

பலாலி விமானத் தளத்துக்கு என்ற பெயரில் படையினர் தற்போது 6 ஆயிரத்து ஐந்நூறு ஏக்கர் காணிகளை சட்டத்துக்கு விரோதமான முறையிலேயே மேலதிகமாக சுவீகரித்து வைத்திருக்கின்றனர்.

- இவ்வாறு எழுத்து மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். பக்கம் 14

## ரயில்வே கடவைக் கவலரே ரயிலில் மோதுண்டு சாவு

### மன்னார்ப் பகுதியில் பரிதாபம்



தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயில் மோதி ரயில்வே கடவை காவலாளி பலியானார். நேற்றுமுன்தினம் இரவு மன்னார் உயிர்த்தராசன் குளம் கஞ்சித்தாழ்வு பகுதியில் பக்கம் 14

## சிங்களவர்களுக்கு முந்திய மூதாதையர்களா தமிழர்கள்?

### நிரூபிக்குமாறு விக்கிக்கு கமன்பில பகிரங்க சவால்



கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் சிங்களவர்களுக்கு முன்னர் தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை முடியுமானால் நிரூபிக்குமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு பகிரங்க சவால் விடுத்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி.

இந்நாட்டில் சிங்களவர்களுக்கு முன்னர் தமிழ் மக்களே குடியிருந்துள்ளனர் என பக்கம் 14

## ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு நீதிமன்றம் அழைப்பாணை!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் பக்கம் 14

## புனரமைக்க முற்பட்ட குளத்தில் புகை கிளம்பியதால் பரபரப்பு

### யாழ். மணியந்தோட்டத்தில் சம்பவம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் குளமொன்றைப் புனரமைப்புச் செய்யும் போது குளத்திலிருந்து புகை வெளியே வந்ததால் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. குளத்தை ஆய்வு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மணியந்தோட்டம் முதலாம் பக்கம் 14

## 14 ஆயிரம் இராணுவத்தினரே குடாநாட்டில் உள்ளனராம்!

### யாழ். படைகளின் தளபதி கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஜூலை25

யாழ். குடாநாட்டில் தற்போது சுமார் 14 ஆயிரம் இராணுவத்தினரே நிலை கொண்டிருக்கின்றனர் என யாழ். படைகளின் தலைமையகக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷண ஹெற்றியாராச்சி தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருந்து படைகளைக் பக்கம் 14

## செம்மணிப் பகுதியில் நேற்று மனித எலும்பு எச்சங்கள் மீட்பு



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் மனித எச்சம் இனங்காணப்பட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மனித உடலின் எலும்புகளின் ஒரு தொகுதி மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய பக்கம் 14

## தமிழர்களின் உணர்வுகளை புரிய மறுக்கிறது நல்லாட்சி!

### அமைச்சரவையில் மனோ காட்டம்



கொழும்பு, ஜூலை 25

தமிழ் மக்கள் நல்லாட்சி அரசின் மீது கோபம் கொண்டுள்ளனர் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். தமிழரின் உணர்வுகளை அரசு புரிய மறுத்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்கள் தொடர்பில் முகப்புத்தகத்தில் பதிவிட் பக்கம் 03

## விஜயகலாவிடம் வாக்குமூலம் நேற்றுப் பதிவு

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பக்கம் 03

## வாள்களுடன் சென்ற 13 பேர் எழுதுமட்டுவாழில் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தென்மராட்சிப் பகுதியில் குழு மோதலுக்குச் சென்ற 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கையுடனான இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் சீனா

இலங்கையுடனான இராணுவ உறவுகளை வலுப்படுத்தவுள்ளதுடன், இலங்கைக் கடற்படைக்கு போர்க் கப்பல் ஒன்றை கொடையாக சீனா வழங்கவுள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 91 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கொழும்பில் உள்ள ஷங்ரிலா விடுதியில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், சீனத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான் வெய் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சீனத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான்வெய் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இந்த ஆண்டு இலங்கையின் முப்படையினருக்கும் சீனா, பல்வேறு பயிற்சிநெறிகளையும் தொடர்ந்து வழங்கியது.



இலங்கை இராணுவ பயிற்சி அகடமியில் சீனாவின் உதவியுடன் அரங்க வளாகம் கட்டப்பட்டு வருகிறது. இலங்கை கடற்படைக்கு போர்க்கப்பல் ஒன்று கொடையாக வழங்கப்படவுள்ளது.

பரஸ்பரம் மூலோபாய நம்பிக்கையை வலுப்படுத்த சீனா விரும்புகிறது.

முக்கியமானநலன்கள் சார்ந்த பிரச்சினைகளின் போது இரண்டு நாடுகளும் ஒன்றுக்கு ஒன்று தொடர்ந்து ஆதரவுடன் செயற்படுவதைக் காண சீனா அக்கறை கொண்டுள்ளது.

இரண்டு நாடுகள் மற்றும் இராணுவங்களுக்கு இடையில், நடைமுறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, அணை மற்றும் சாலைத் திட்டத்தின் அபிவிருத்தியைப் பலப்படுத்த சீனா விருப்பம் கொண்டுள்ளது.

ஒரு நல்ல மற்றும் உண்மையான நண்பன் என்ற வகையில், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இலங்கையின் சமூக- பொருளாதார அபிவிருத்தி மற்றும் இராணுவம், மற்றும் பாதுகாப்பு கட்டுமாணங்களுக்காக சீனா தொடர்ந்து வலுவான ஆதரவை வழங்கியுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் சோதனையான தருணங்களிலும் பலமாக வளர்ச்சியடைந்துள்ளன.

இலங்கையுடனான இராணுவ உறவுகளை முன்னேற்றுவதற்கு சீனாவின் பாதுகாப்பு ஆலோசகர்கள் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளில் இரண்டு இராணுவங்களும், பயிற்சி, கூட்டுப் பயிற்சி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் ஆழமான தொடர்பு மற்றும் ஒத்துழைப்பைக் கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற இலங்கை பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன,

இலங்கைக்கான சீனாவின் இராணுவ உதவிகள், இரண்டு நாடுகளுக்கும் இடை யிலான இருதரப்பு உறவுகளின் வெற்றியை சுட்டிக்காட்டுகின்றன.

எனினும், இலங்கையில் சீனாவின் இணக்கப்பாடுகளின் நன்மைகளை இலங்கை இன்னமும் அறுவடை செய்யவில்லை. - என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் இலங்கை படை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பிரதமருடன் அமெரிக்க இராணுவ ஜெனரல் பேச்சு



கொழும்பு, ஜூலை 25

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளைத் தளபதி ஜெனரல் ரொபேர்ட் பிறவுண், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரதமரின் அதிகாரபூர்வ பணியகமான அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், இந்தோ - பசுபிக் ஒத்துழைப்பு மற்றும் விதிமுறைகளின் அடிப்படையிலான செயல்முறைகள் குறித்து ஆக்கபூர்வமான பேச்சுக்கள் இடம்பெற்றன என்று இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் தெரிவித்துள்ளார்.

அவரும், பிரதமருடனான இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

அதேவேளை, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவையும், ஜெனரல் ரொபேர்ட் ஹில்டன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

# இஸ்ரேலில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கை பணியாளர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 25

இஸ்ரேலில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கை பணியாளர்களுக்கு அங்கிருந்து வெளியேறுவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுளளது.

இதற்கான பொதுமன்னிப்பு காலம் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி வரை அமுலிலிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நாடு திரும்பாத தொழிலாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதியமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தயாரிப்புக்கான நடவடிக்கைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 25

2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக்கான ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என திறைசேரி தெரிவித்துள்ளது.

இதற்காக, பொதுமக்களினதும் பல்வேறு அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சமூகத்தினரின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படும் என்று திறைசேரியின் பிரதி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

# கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்தார்



கனேடிய பிரதமர்!

1983 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை தொடர்பில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

கறுப்பு ஜூலை சம்பவம் இடம்பெற்று 35 வருடங்கள் ஆகின்ற நிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கலவரத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதாகவும் அவர்களது குடும்பத்தாருக்கு தமது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு, அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அவசியமென அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் இலங்கை அரசுடன் கனடா எப்போதும் இணைந்து பணியாற்றும் என்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்த அறிக்கையினூடாக குறிப்பிட்டுள்ளார்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு இன்று நேர்முகம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்குதல் - 2 ஆம் கட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்தில் பதிவை மேற்கொண்டவர்களுக்கு இதற்கான நேர்முகப் பரீட்சை 2018, ஜூலை மாதம் 16 - 19 ஆம் திகதி வரை நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இச் செயலகத்தில் பதிவை மேற்கொண்டு நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றத் தவறிய வேலையற்ற பட்டதாரிகளுக்கும் மாவட்டச் செயலகத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்து நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவை மேற்கொள்ளாத வேலையற்ற பட்டதாரிகளுக்கும் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் பொருட்டு இன்று புதன்கிழமையன்று காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை நல்லூர் பிரதேச செயலகத்தில் நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்படவுள்ளது.

எனவே பதிவை மேற்கொண்ட - இதுவரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத - வேலையற்ற பட்டதாரிகள் உரிய ஆவணங்களுடன் குறித்த நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- இவ்வாறு நல்லூர் பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் தெவித்துள்ளார்.

# சுவிஸ் நாடாளுமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம்





கறுப்பு ஜூலை இன அழிப்பை நினைவுகூரும் முகமாக சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்றத்திற்கு முன்பாக பெரிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் தமிழ் பெண்கள் அமைப்பு போன்றன இணைந்து ஏற்பாடு செய்த அந்தக் கவனவீர்ப்பு நிகழ்வில் தமிழ் இன அழிப்பு தொடர்பான பல்வேறு தரவுகள் பல்வேறு மொழிகளில் வினியோகிக்கப்பட்டமையுடன் பெரிய கவனவீர்ப்பு செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# நடுக்கடலில் தத்தளித்த ரஷ்ய பிரஜை இலங்கைக் கடற்படையினரால் மீட்பு

கொழும்பு, ஜூலை 25

காலியிலிருந்து 146 கடல்மைல் தூரத்தில், தத்தளித்துக்கொண்டிருந்த ரஷ்ய பிரஜையொருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டு கராப்பிட்டிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வர்த்தக கப்பலொன்று விபத்துக்குள்ளானதிலேயே, ரஷ்ய பிரஜை கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தார் என இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் விடுதலைப்புலிகளின் பாடல் எழுதப்பட்டமை தொடர்பில் விசாரணை

வவுனியா, ஜூலை 25

வவுனியா பூம்புகார் பிரதான வீதியில் ஒன்றில் இனந்தெரியாதவர்களினால் விடுதலைப்புலிகளின் பாடல் வரிகள் சில எழுதப்பட்டமை தொடர்பில் பொலிஸாரும், புலனாய்வாளர்களும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பூம்புகார் பிரதான வீதியில் வர்ணப்பூச்சினால் விடுதலைப்புலிகளின் பாடல் வரிகள் எழுதப்பட்டிருந்தன. இதையடுத்து நேற்றுமுன்தினம் அவ்விடத்தை சுற்றி வளைத்த பொலிஸார் பலரிடம் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். அப்பகுதியில் புலனாய்வுப்பிரிவினரும் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பாடல் வரிகள் எவரால் எழுதப்பட்டன?, எதற்காக எழுதினர்? போன்ற விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. (க - 100)

# 2015 அரசியல் மாற்றம் அழிவில் முடியும் என எச்சரித்தோம்; அதுவே இப்போது நடக்கிறது

## ஞானசார தேரர் கூறுகின்றார்



கண்டி, ஜூலை 25

நாட்டில் ஏற்படப் போகும் அரசியல் மாற்றம் அழிவில் தான் முடியும் என கடந்த 2015 ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னரேயே நாம் தெளிவாக எடுத்துக் கூறினோம் எனவும், அதனையே நாடு தற்பொழுது அனுபவிப்பதாகவும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

திகண இனவாதச் சம்பவத்தில் ஈடுபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்டு தற்பொழுது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் சுகதுக்கங்களை விசாரிப்பதற்காக நேற்று தேரர் உட்பட குழுவினர் கண்டி போகம்பரைச் சிறைச்சாலைக்கு சென்றிருந்தனர். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் மேற்படி விடயத்தைக் கூறினார்.

மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் மீண்டும் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு தேர்தல் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். இந்த தேர்தலின் பின்னர் மக்களின் தீர்மானத்தைப் பார்க்கலாம் எனவும் தேரர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றவர் சர்வாதிகாரியா? ஜனநாயகவாதியா? என்பது குறித்து தமக்குப் பிரச்சினையில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சியினர் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். எமக்கு தனிநபர்கள் யார் என்பது முக்கியமில்லை. எமது நாட்டை சரியான திசைக்கு கொண்டு செல்ல முடியுமான, முதுகெலும்புள்ள ஒருவரே எமக்குத் தேவை.

ஜனாதிபதியாக வருபவர், இந்த மண்ணைப் பற்றி அறிந்த, சூழலை விளங்கிய, மக்களின் மனங்களில் இடம்பிடித்த ஒருவராக இருத்தல் வேண்டும். சிலபோது இவ்வாறு வருபவர் சர்வாதிகாரியாக இருக்க முடியும். அது எமக்கு முக்கியம் இல்லை. எமக்குத் தேவையானது, மக்களின் எதிர்பார்ப்பை மலரச் செய்யும் ஒருவரே என்பதாகும். – எனவும் தேரர் மேலும் குறிப்பிட்டார்.

# நல்லாட்சியில் அறுபதாயிரம் பேர் நேரடியாகப் பழிவாங்கப்பட்டுள்ளனர்!

## நீதிக்கான குரல் அமைப்பு குற்றச்சாட்டு

நல்லாட்சி அரசின் நடவடிக்கைகளினூடாக இது வரையில் 60 ஆயிரம் பேர் நேரடியாக அரசியல் பழிவாங்கலுக்குள்ளாக்கப்பட்டுள்ளமையுடன் சுமார் 3 இலட்சத்து 50 பேர் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று 'நீதிக்கான குரல்' அமைப்பின் செயலாளர் லலித் பியும் பெரேரா தெரிவித்துள்ளார்.

'நீதிக்கான குரல்' அமைப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் – நல்லாட்சி அரசின் நடவடிக்கை மூலம் 60 ஆயிரம் பேர் நேரடியான அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டுள்ளனர். மறைமுகமாக 2 லட்சத்து 50 ஆயிரம் முதல் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நேரடியான அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டவர்களில் 17 ஆயிரம் பேர் அரசசேவையாளர்களாவும், 3,500 பேர் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். அது தவிர, தனியார் துறை மற்றும் சுயதொழிலாளர்களும் அரசின் பழிவாங்கல் மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர். – என்றார்.

# மேலும் 4ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச சேவையில் வேலை வாய்ப்பு

## நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூலை 25

அரச துறைகளில் மேலும்4 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டு கூடிய பெறுபேறுகளைப் பெறும் பட்டதாரிகள் 4 ஆயிரம் பேர் இதன்படி அரச தொழில் துறைகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரச அபிவிருத்தி அதிகாரிகளாக இவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# வடக்கிலும் ஊடக சுதந்திரம் மஹிந்த காலத்திலும் இருந்தாம்!

## தமக்குத் தாமே அவர் நற்சான்றுரை

தனது ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்தால், அதற்கு அன்றைய அமைச்சரவையும் பொறுப்புக் கூற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பியகேள்விக்குபதிலளிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எனது ஆட்சிக்காலத்தில் ஊடக சுதந்திரம் இருக்கவில்லை என்றால், அதைத் தற்போதைய ஜனாதிபதியும் அறிந்திருக்க வேண்டும். எனது ஆட்சிக்காலத்தில் வடக்கிற்கும் ஊடக சுதந்திரம் கிடைத்தது.

தற்போதைய அரசாங்கம் செய்யும் பணிகள் பற்றி மக்கள் நன்றாக உணர்ந்துள்ளனர். இதனை விட ஊடகங்கள் அவற்றை நன்கு அறிந்துள்ளன எனவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

### விஜயகலாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயகலா மகேஸ்வரனின் வீட்டுக்கு நேற்று பகல் நேரில் சென்ற திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தவிர்க்கும் பொலிஸ் பிரிவினர் சுமார் மூன்றரை மணி நேரம் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

புலிகள் இயக்கம் மீண்டும் உருவாக வேண்டும் என்ற சாரப்பட பொது நிகழ்வு ஒன்றில் அவர் உரையாற்றியமை தொடர்பில் இந்த வாக்குமூலம் பெறப்பட்டது.

### தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள குறிப்பு ஒன்றிலேயே அமைச்சர் மனோ கணேசன் இதனைக் கூறியுள்ளார்.

அவர் பதிவிட்டுள்ள குறிப்பில் –

'இன்று (நேற்று) காலை அமைச்சரவையில் வடக்கு, கிழக்கில் வீடு கட்டுதல் தொடர்பில் கடும் வாத, விவாதம் ஏற்பட்டபோது நான் ஜனாதிபதியைப் பார்த்து சுத்த சிங்களத்தில் சொன்னவை:–

(அமைச்சரவையில் அனைவரும் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.)

"விஜயகலாவை முழுநாடும் திட்டுகிறது. அவரது கருத்தை நானும் ஏற்கவில்லை. ஆனால் அவரது கருத்திற்குப் பின்னுள்ள உண்மையை யாரும் உணரவில்லை. வடக்கு, கிழக்கில் எவ்வித வாழ்வாதார அபிவிருத்தியும் செய்யப்படவில்லை.

"இங்கிருந்து தலைவர்கள் அங்கு போய் வாக்குறுதிகள் அளிப்பதுதான் தொடர்ந்தும் நடக்கிறது. ஆனால் அங்கு ஒன்றும் நடைபெறுவதில்லை. மூன்று வருடங்கள் கழிந்தும், அங்கு அமைச்சர் சுவாமிநாதன், தனக்கு ஒதுக்கப்பட்ட 40 ஆயிரம் வீடுகளில் ஒரு வீட்டையேனும் கட்டவில்லை.

"இந்தநிலையில் தற்போது மேலும் 50 ஆயிரம் வீடுகள் கட்டும் பொறுப்பு, உங்கள் அமைச்சு மூலம் என்னிடம் வந்துள்ளது. அதற்கும் பல தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

"யார் என்னதான் அங்கு போய் சொல்லி வந்தாலும், அங்கு மக்கள் நியாயமாக கோபம் கொண்டுள்ளார்கள். உங்கள் மீது, பிரதமர் மீது, நம் அரசாங்கம் மீது கோபம் கொண்டுள்ளார்கள்" – எனப் பதிவிட்டுள்ளார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு கொழும்பு 'ஷங்கரிலா' ஹோட்டலில் இந்தச் சந்திப்பு நடந்தது. அது பற்றிய படங்கள் உலா வரத் தொடங்கியதுமே இராஜதந்திரப் பதற்றம் கொழும்பில் தொற்றிக் கொண்டு விட்டது என்பதை அறியமுடிந்தது.

வழமைபோல, மஹிந்தரின் சந்திப்புகளை ஒட்டிய விவகாரங்களில் மஹிந்த தரப்புக் கருத்தை இம்முறையும் 'காலைக்கதிர்' நாளிதழ் ஏனைய தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களை முந்திக் கொண்டு, தனித்துவமாக – பிரத்தியேகமாக – நேற்றே தலைப்புச் செய்தியாகத் தெரிவித்துவிட்டது. அதனால், அந்தச் செய்தியின் மொழி பெயர்ப்பைப் பெற்றுக் கொள்வதில் கொழும்புத் தரப்புகள் ஆர்வம் காட்டியமையையும் அறிய முடிந்தது.

இன்னொரு தரப்பின் வெறும் வாய்க்கும் மெல்லுவதற்கு நல்ல அவலாக இந்தச் செய்தி வந்திருக்கும் என நம்புகிறோம்.

ஏற்கனவே 'காலைக்கதிர்' நாளிதழ் மஹிந்தர் ஆதரவுத் தளத்தில் நின்றுதான் பிரசுரமாகின்றது என வாய் கூசாமல் போகுமிடம் எல்லாம் சேறு வாரிப் பூசிவரும் அரசியல்வாதிகளும் (?) 'காலைக்கதிருக்கு'ம் எள், எண்ணெய்தெளிக்கநல்லகாலம் வந்துவிட்டது என மகிழ் வார்கள் என்பது திண்ணம்.

*"பார்த்தீர்களா? நாங்கள் சொன்னபோது நீங்கள் நம்பவில்லை. இப்போதும் மஹிந்தர் தரப்புச் செய்தி ஏனைய சிங்கள, ஆங்கில நாளிதழ்களில் கூட வராமல் உ-நதப் பத்திரிகையில் வருகின்றது...! அப்ப இந்தப் பத்திரிகைக்குப் பின்னணி யார் என்பதை இனியாவது நம்புவீர்களா?"* – என்ற தமது பத்திரிகானுபவக் குறைபாட்டை இப்படிக் குறுகிய புத்தியில் அவர்கள் கொட்டத் தொடங்கிவிடுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

இது சீனத் தரப்பின் நிகழ்வு. அதுவும், இராணுவத்தை ஒட்டிய நிகழ்வு. அதுவும், அந்த நிகழ்ச்சிக்கு நாட்டின் பிரதமரோ, ஜனாதிபதியோ வரவில்லை. அவர்கள் மிஸ்ஸிங். அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் தெரியவில்லை. வேறு முக்கிய அரசுப் பிரமுகர்களும் பங்குபற்றினர் என்ற தகவல்கள் கூட வெளியாகவில்லை.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்திருந்தார். அவரது தம்பியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ வந்திருந்தார். இருவருமே சீன சார்புப் போக்குக் காரணத்தினால் பீஜிங்கின் பெரு வரவேற்புக்குரியவர்கள்தான்.

ஆனால், அந்த இருவரோடும் இந்த நிகழ்வில் பங்குபற்ற வந்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஒன்றாக ஒரு சோபாவில், சீனத் தூதுவர் சகிதம் அமர்ந்திருந்து நீண்ட நேரம் விரிவாகப் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

இது 'எதிர்பாராத' சந்திப்பா? அல்லது 'எதிர்பார்த்து' ஏற்பாடு செய்த சந்திப்பா?

பக்கத்து நாட்டுக்காரர்கள் இது பற்றி அதிகம் நோண்டுகின்றார்கள் என்று கேள்வி.

தமிழரின் 'கிழட்டு நரி' சீன வலையில் சிக்காது என்பது புதுடில்லியின் பொதுவான அபிப்பிராயம்.

ஆனால் புதுடில்லிக்கும் பூருடா விடுவதற்கு – செய்தி சொல்வதற்கு – சம்பந்தனின் சாணக்கியமாக இது இருக்கலாம் என்று பக்கத்து நாட்டு ஆலோசகர்கள் சந்தேகிக்கின்றார்கள் என்றும் கேள்வி.

இப்படிப் பல சிக்கல்கள் இருப்பதால் இந்தச் சந்திப்பு விவரம் குறித்து மௌனம் காக்க விரும்புகின்றார் சம்பந்தன் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

*"பல விடயங்கள் பற்றிப் பேசினோம். இப்போதைக்கு வெளியில் கூறவேண்டிய விடயங்கள் ஏதும் அதில் இல்லை. மஹிந்த ராஜபக்ஷ கூறிய விடயங்களை நான் அப்படியே என்று கேட்டு செவிமடுத்தேன். அவ்வளவுதான்! அதற்கு மேல் அதில் ஒன்றுமில்லை."* – என்று தமக்கு நெருக்கமான தரப்புக்கும் கூட கூறிச் சமாளிக்கிறார் சம்பந்தன் என்று நம்பிக்கையான தரப்புகளின் மூலம் அறியமுடிந்தது.

நாம் ஊடகவியலாளராகத் தொல்லை கொடுத்தமையால் மஹிந்த ராஜபக்ஷ மட்டும் இந்தச் சந்திப்பில் தான் தெரிவித்த கருத்துக்களில் சிலவற்றை எங்களுக்கு எடுத்து அவிழ்த்து விட்டார் போலும்.

இதில் இன்னொரு கொசுறுத் தகவலும் உண்டு.

இப்போது இலங்கைக்கான சீனத் தூதுவராக இருப்பவர் சீனாவின் Career Diplomat (இராஜதந்திரச் சேவையில் வந்தவர்) அல்லர். சீன அரசுத் தலைமைக்கு மிக நெருக்கமான அரசியல் பாரம்பரியத்தில் வந்த ஒரு சாணக்கியர். அவரது அணுகுமுறை, காய் நகர்த்தல்கள், நடவடிக்கை எல்லாமே எப்போதும் வித்தியாசமாக இருக்கும் என்றுதான் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் பேச்சு உண்டு.

மஹிந்த, கோட்டா, சம்பந்தன் சந்திப்பு கூட அவ்வாறு அவரின் கைவரிசை வேலையின் ஆரம்பமா? அதற்குள் புதைந்து – பொதிந்து – கிடக்கும் மர்மம் என்ன? சீனத் தூதுவரின் – அல்லது தூதரகத்தின் – காய் நகர்த்தலின் பின்னால் புதைந்து கிடக்கும் சூட்சுமம் யாது? இவை எல்லாம் அறியப்பட வேண்டியவை.

ஆனால் நடந்தது என்னவோ வெறும் எதிர்பாராத சந்திப்பு அல்ல. அதையும் தாண்டி பூடகமான அம்சங்கள் பல இதற்குப் பின்னால் புதைந்து கிடக்கின்றன என்று 'பல்லி' சொல்கிறது. மலிந்தால் சந்தைக்கு வராமலா போய் விடும்? பொறுத்திருந்து பார்ப்போமே!

**- மின்னல் -**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மஹிந்த தரப்பே பொறுப்பு

***“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மக்களைச் சரியான திசையில் வழி நடத்தாவிட்டால் வடக்கு, கிழக்கில் புதிதாக அரசியல் சக்திகள் எழுச்சி பெறலாம்.”***

**– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் நேரடியாக எச்சரிக்கை தெரிவித்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

**மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றமை போல தமிழ்த் தரப்பில் புதிய அரசியல் சக்திகள் எழுச்சி கொள்வதற்கு – கால்கோள் கொள்வதற்கு – சாதகமான சூழல்கள் கனிந்து வருகின்றன என்பது உண்மைதான்.**

**ஆனால், அதற்கான எச்சரிக்கையை – அபாய அறிவிப்பை – அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கொடுப்பதில் அர்த்தமில்லை. அவர் தமக்குத் தாமே – தமது தரப்புக்கே – அத்தகைய எச்சரிக்கையைக் கொடுக்க வேண்டும்.**

**அத்தகைய சக்திகள் எழுச்சி கொள்ளுமானால் அதற்கான பொறுப்பைக் கூட்டமைப்பின் மீது போடுவதிலும் பார்க்க அவர் தமது தரப்பு மீதுதான் போடவேண்டியிருக்கும் என்பதே உண்மை.**

**எத்தகைய சக்திகள் எழுச்சி கொள்ளப் போகின்றன என்பதை என்ன வார்த்தைகளில் சம்பந்தனுக்கு அவர் எடுத்துரைத்தார் என்பது தெரியாத விடயமாக இருக்கலாம். எத்தகைய சக்திகளை அவர் குறிப்பிடுகின்றார் என்பதிலும் தெளிவில்லை.**

**முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ்த் தேசிய சக்திகள் புதிய உத்வேகம் கொள்வதற்கான சந்தர்ப்பத்தையோ –**

**அல்லது அதையும் தாண்டி, விடுதலைப் புலிகள் போன்ற ஆயுதம் தாங்கிய போராளிகள் அமைப்பு மீளப் பிறப்பெடுப்பதற்கான வாய்ப்பையோ –**

**கூட அவர் கருதியிருக்கலாம்.**

**ஆனால், அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற மித வாத அமைப்புக்களைத் தாண்டி ஏதேனும் தீவிரப் போக்கு சக்திகள் மேலெழலாம் என்பதையே அவர் எச்சரிக்கையாக விடுகின்றார் என்பது தெளிவு.**

**ஆனால், இத்தகைய ஆபத்து நிலை ஏற்பட்டதற்கும், அத்தகைய ஆபத்துக்கான நிலைமை தொடர்வதற்கும் பிரதானமான காரியம் – அல்லது காரணம் – அவரது பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குக் கட்சிகளும் கூட்டு எதிரணியும்தான் என்பது நாடறிந்த பரகசியம்.**

**விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர் அமைதி முறையில், சமாதான வழியில், இணக்கத் தீர்வு ஒன்றை இந்தத் தீவில் எட்டுவதற்கு முட்டுக் கட்டையாக இருப்பது மஹிந்த ராஜபக்ஷ தரப்பு மட்டும்தான் என்பதும் ஊரறிந்த உண்மை.**

**தன்னுடைய குடும்ப ஆட்சியை மீள நிலைநிறுத்த வேண்டும் என்ற பேராசையில் பௌத்த, சிங்கள இனவாதத்தைத் தூண்டி விட்டு நிற்கும், மஹிந்த தரப்புத்தான் இந்தத் தீவின் அமைதித் தீர்வுக்குப் பிரதான சத்திராதி என்பது வெளிப்படையானது.**

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவுக்குப் பின்னர், ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்புடன் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளில் முழு மனதுடன் ஈடுபட்டது தமிழ்க் கூட்டமைப்பு.**

**மஹிந்த ராஜபக்ஷ அரசுத் தரப்பின் பிரதிநிதிகளுடன் தீர்வுக்கான முயற்சியாக பதினாறு சுற்றுப் பேச்சுகளில் கூட்டமைப்பு ஈடுபட்டது. அந்த ஒவ்வொரு சுற்றுப் பேச்சிலும் இடம்பெற்ற விடயங்களின் அறிக்கைப் பதிவு இன்னும் ஆவணமாக உள்ளது. பதினாறு சுற்றுப் பேச்சுகளின் பின்னரும் அடுத்த சுற்றுப் பேச்சுக்காக மூன்று நாள்கள் தொடர்ந்து பேச்சுக்குரிய இடத்தில் போய் தனித்துக் காத்திருந்து விட்டுத்தான் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர். அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் ஒரு தலைப் பட்சமாகப் பேச்சு முயற்சிக்கு வராமல் உதாசீனத்துடன் நடந்து கொண்டமையுடன், கூட்டமைப்பைப் புறம்ஒதுக்கி அந்த அமைதி முயற்சியைச் சீரழித்தனர்.**

**இப்போதும் கூட, நல்லாட்சி அரசுடன் தமிழ்த் தரப்பு தீர்வு முயற்சிகளை முழு மனதுடன் ஈடுபட்டு முன்நகர்த்தத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கின்றது. ஆனால், அதுவும் கூட முன்நகரமுடியாது இக்கட்டில் சிக்கி நிற்பதற்கு மஹிந்த தரப்பான கூட்டு எதிரணிதான் பிரதான காரணம்.**

**இவ்வாறு இந்தத் தீவை பல தசாப்தங்கள் சீரழித்து வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்குக் கிடைத்த அனைத்து மார்க்கங்களையும் தனது பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனைப் போக்கால் குழப்பியடித்து நிற்கும் மஹிந்த தரப்பு, அதனால் விளையக் கூடிய தீமைக்கு கூட்டமைப்பைப் பொறுப்பாக்க நினைப்பதும், எச்சரிப்பதும் வெறும் அபத்தமன்றி வேறில்லை.**

# முல்லைத்தீவில் மீனவர் போராட்டம்





முல்லைத்தீவு, ஜூலை 25

அத்துமீறல் நடவடிக்கைகளால் பொறுமையிழந்த முல்லைத்தீவுக் கடற்தொழிலாளர்கள் நீரியல் வளத் திணைக்களத்தை முற்றுகையிட்டு நேற்று போராட்டம் நடத்தினர்.

அதிகாரிகளின் உறுதி மொழியை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது!

வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், கடற்றொழில் அமைப்பை சார்ந்தவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் ஒன்றாகத் திரண்டு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் திணைக்கள அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் அலுவலகத்திற்கு முன்னாள் முற்றுகையிட்ட மக்கள் கடற்தொழில் திணைக்கள அதிகாரி வந்து தங்கள் பிரச்சனைக்கு தீர்வு காணும் வரை வீதியில் போராட்டத்தில் ஈடுபடுவோம் என எச்சரிக்கை விடுவித்தனர்.

இந்நிலையில் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரி நீதிமன்றத்திற்கு சென்றிருந்த காரணத்தால், மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொடிருந்தனர்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் இருந்து அதிகாரி திணைக்களத்திற்கு வருகைதந்தபோது வசாலிலே மறித்த மக்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்தனர்

ஆயிரத்திற்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் கையெழுத்திட்ட மனுவை வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கடற்தொழில், நீரியல்வளத் திணைக்கள அதிகாரியிடம் கையளித்துள்ளர்.

அந்த மனுவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பில் சட்டவிரோத தொழில் நடவடிக்கை மிக மோசமாக நடைபெற்று வருகின்றது. இதுவிடயமாக பல தடவைகள் தெரியப்படுத்தியும் இன்று வரை தீர்வு கிடைக்கவில்லை. கடற்தொழிலாளர்கள் வறுமையில் வாடுகின்றார்கள். எனவே வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடிப்பது,வெடி வைத்து மீன் பிடித்தல்,லைலா வலை மீன்பிடித்தல்,சுருக்குவலைமூலம் மீன் பிடித்தல்,சங்கு பிடித்தல், அட்டை பிடித்தல் போன்ற தொழில் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். இதற்காக கொடுக்கப்பட்ட அனுமதிகளும் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும்என்று.–கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (க–81)

# மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று முல்லைத்தீவில்!





முல்லைத்தீவு மாவட்த்தில் உள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்னைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று இடம் பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டு கள்ளப்பாடு பகுதியில் இது நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களின் கடல் வழும் அழிக்கப்படுவது, வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது மற்றும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையை தடைசெய்தல் தொடர்பிலான கலந்துரையாடல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து நடத்துவதாக தீர்மானிக்கப்பட்ட நிலையில் நேற்று இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உவிப் பணிப்பாளர், அதிகாரிகள், கடற்படையினர், வடமாகாணசபை உறுப்பினர்கள்,பொலிஸார் உள்ளிட்டவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய கலந்துரையாடலில் வடமாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் இ. பிரதாபன், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் சார்பாக அவரது பிரதிநிதிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ மக்கள்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பல மணி நேரமாக கலந்துரையாடல் இடம்பெற்றபோதும், கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கூட்டத்தில் கலந்துகொள்ளாத காரணத்தால் இதற்கான உறுதியான தீர்மானங்கள் எட்டப்பட முடியாது போனது.

இதனால், மக்கள் திணைக்களத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து இவர்கள் இன்று முடிவு எடுக்காவிட்டால் எமக்கு தீர்வு கிடைக்காது என கூறி கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தை முற்றுகையிடுவோம் என்றும் கூறி கூட்டத்திலிருந்து கலைந்து சென்றனர். (க–81)

# அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளைத்தளபதி இலங்கை கடற்படை தளபதியுடன் சந்திப்பு!



கொழும்பு, ஜூலை 25

அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளைத்தளபதிஜெனரல்றொபேட் பிறவுண் தலைமையிலான குழுவினர் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவை சந்தித்தனர்.

கடற்படைத்தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த சந்திப்பின்போது கடல்சார்பாதுகாப்புதொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பினை நினைவு கூரும் வகையில் இருவரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர். (க)

## நாளை

26.07.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : பூராடம் மு.இ. 10.57 வரை
திதி : சதுர்த்தசி பி.இ. 12.09 வரை
சுபநேரம் : 7.32 – 9.02 வரை
இராகுகாலம் : 1.32 – 3.02 வரை

# முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் மறுசீரமைப்பை துரிதமாகக் கொண்டு வருக!

கொழும்பு, ஜூலை 25

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்ட மறுசீரமைப்பை துரிதமாகச் சட்டமாக்க நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதொடர்பாக தொடர்ந்து காலதாமதப்படுத்துவது, முஸ்லிம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் செய்யும் அநீதியாகும் என முஸ்லிம் பெண்கள் அமைப்புகள் கூட்டாக தெரிவித்தன.

கொழும்பில் அமைந்துள்ள முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியில் இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி சபானா குல் பேகம் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள 2009ஆம் ஆண்டு முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூக் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது சிபாரிசு அறிக்கையை கடந்த ஜனவரி மாதம் நீதி அமைச்சரிடம் கையளித்தது. அந்த அறிக்கையில் குறிப்பிட்ட சில விடயங்களில் குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் பூரண இணக்கப்பாடு இருக்கவில்லை.


முஸ்லிம் பெண்கள் அமைப்புக்கள்

குறிப்பாக முஸ்லிம் பெண்கள் விவாகம் செய்வதற்காக இருக்கவேண்டிய வயதெல்லை, காதி நீதிவான்களாக பெண்கள் நியமிக்கப்படல் மற்றும் விவாகப் பதிவு கட்டாயமாக்கப்படல் போன்ற விடயங்களிலே கருத்து வேறுபாடு இருக்கின்றது.

அத்துடன், குறிப்பிட்ட அறிக்கையை தயாரிக்க அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, இஸ்லாமிய சட்டநிபுணர்கள், வெளிநாட்டு சட்ட அறிஞர்கள் எனப் பலரது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொண்டே இந்த அறிக்கையை தயாரித்து நீதி அமைச்சரிடம் கையளித்தோம்.

என்றாலும், அறிக்கையில் இருக கும் முரண்பாடான விடயங்கள் தொடர்பாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குழுவின் தலைவரால் கடந்த 19ஆம் திகதி விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவுடன் கலந்துரையாடிய பின்னரே இது தொடர்பாக தீர்மானத்துக்கு வரலாம் என தெரிவித்து அவர்களுடன் 24 ஆம் திகதி நேற்றைய தினம்) கலந்துரையாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், கடந்த 9 வருடங்களாக உலமா சபையுடன் கலந்துரையாடியே சிபாரிசு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அவர்களுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுத்திருப்பதானது இந்த திருத்தச் சட்டத்தை மீண்டும் 9 வருடங்களுக்கு பின்னுக்கு கொண்டுபோகும் செயலாகும்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களும் உலமா சபையும் கலந்துரையாடுவதனால் பெண்கள் சார்பாக எவ்வகையான முடிவுகள் எடுக்கப்படும் என்பதில் எங்களுக்கு பாரிய சந்தேகம் இருக்கின்றது.

அதனால், நீதியரசர் சலீம் மர்சூக் தலைமையிலான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிசு அறிக்கையை அங்கீகரிப்பதுடன் அவ்வறிக்கையை சட்டமாக்க நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை மிக விரைவில் பெற்றுக் கொள்ள நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் குறித்த அறிக்கை தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை நடத்தி காலத்தை கடத்த இடமளிக்காமல் அதற்கான கால வரையறை ஒன்றை நீதி அமைச்சர் ஏற்படுத்த வேண்டும் என்றும்.– அவர் கூறியுள்ளார்.

# அதிக இலங்கையர் வாய், கழுத்து சார்ந்த புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு, ஜூலை 25

மாதத்திற்கு ஒரு தடவையேனும் கண்ணாடிக்கு முன் சென்று வாயை சுயமாக பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் வெள்ளை மற்றும் சிவப்பு நிற வாய் புற்றுநோயை அறிகுறி ஏற்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ள முடியும் என புற்றுநோய் ஒழிப்பு செயற்றிடத்தின் நிபுணர் டொக்டர் பிர சன்ன ஜயசேகர தெரிவித்தார்.

இதேவேளை கூடுதலான இலங்கையர்கள் வாய் மற்றும் கழுத்து சார்ந்த புற்றுநோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம் என திணைக்களத்தின் தரவு சேவைகள் தொடர்பான பிரதி பணிப்பாளர் டாக்டர் சந்திக கஜநாயக்க தெரிவித்தார்.

சுகாதார ஊக்குவிப்பு பணியத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரதி பணிப்பாளர் டாக்டர் சந்திக கஜநாயக்க இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்–

ஐந்தாண்டுகளில் இந்த அளவைக் குறைப்பது அவசியமாகும். முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலம் வாய் புற்றுநோயை குணமாக்க முடியும். வெற்றிலை, புகையிலை என்பன வாய் மற்றும் கழுத்து புற்று நோய்கான பிரதான காரணங்களாகும். இவ்வாறான நோயாளர்களுக்கு சிசிக்சை வழங்குவதற்கு வருடாந்தம் 13 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி செலவாகிறது.

வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னர் வாயில் சிவப்பு மற்றும் வெள்ளைநிற மச்சம் உருவாவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பற்சிகிச்சை பீடத்தில் பேராசிரியர் ருவன் ஜயசிங்க கூறினார். இந்த அறிகுறி ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சை வழங்குவதன் மூலம் நோயை குணப்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாய்ப் புற்றுநோயினால் நாளாந்தம் மூன்று பேர் மரணிக்கிறார்கள். நாட்டில் நாளாந்தம் ஏழு வாய் புற்றுநோயாளர்கள் இனங்காணப்படுகின்றார்கள் என்றும் சுகாதார ஊக்குவிப்பு பணியத்தின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிகவடன தெரிவித்தார்.

# நவீன தொழில்நுட்ப ரயில் கட்டுப்பாட்டு நிலையம் அமைக்க நடவடிக்கை!



கொழும்பு, ஜூலை 25

நவீன தொழில்நுட்பத்துடனான ரயில் கட்டுப்பாட்டு நிலையம் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என ரயில்வே பொது முகாமையாளர் எஸ்.எம்.எம். அபேவிக்ரம தெரிவித்தார்.

மருதானைக்கும், கோட்டை ரயில் நிலையத்திற்கும் இடையில் இந்த நிலையம் அமையவுள்ளது.

இதற்கான நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வழங்குகின்றது.

கட்டடங்களை அமைக்க ஒரு ஏக்கர் காணி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

3 கட்டங்களின் கீழ் நிர்மாணப் பணிகள் இடம்பெறும். முதலாவது கட்டப் பணிக்கு பத்துக் கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும்.

இந்த வருடத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான ரயில் கட்டுப்பாட்டு நிலையம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

# ஒருநாளில் 30 பேரைக் கடிக்கும் நாய்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மாவட்டத்தில் நாய்க்கடிக்கு இலக்காகி தினமும் சராசரியாக முப்பதிற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர் என வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான முதலமைச்சர் விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரின் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சுகாதார விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட போது யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பாராட்டிய மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்த வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கேதீஸ்வரன் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை பிரதேச சைத்தியசாலையையும் தரமுயர்த்த வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலை அவ்வாறு தரமுயர்த்த முடியாதென்றும் தெல்லிப்பழை வைத்திய சாலையை தரமுயர்த்துவதாயின் அது மாகாண அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்குள் வந்தால் உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப் பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்க கடும் எதிரப்பை வெளியிட்ட சிவாஜிலிங்கம் மாகாணத்திலிருந்து எல்லாம் மத்திக்கு வர வேண்டுமென்று எவ்வாறு கூற முடியுமெனவும் கேள்வியெழுப்பியமையுடன் உயிரைக்காக்க வேண்டிய அவசியம் இருப்பதால் எதுவானாலும் பரவாயில்லை முதலில்ல உயிர்காக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இதன்போது மாவட்டத்தின் பல இடங்களிலும் நாய்கள் அதிகமாக காணப்படுகின்றன என்றும் நாய் கடிக்கு இலக்காகி தினமும் 30 மேற்பட்டவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகின்றனர் எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

## சேதனப் பசளையினை ஊக்குவித்தல் திட்டத்தில் ஐயாயிரம் விவசாயிகளை சுயமாக இணைவு

கொழும்பு, ஜூலை 25

விவசாய அமைச்சின் இரசாயன உரத்திற்குப் பதிலாக சேதனப் பசளையை ஊக்குவித்தல் வேலைத்திட்டத்தில் 5 ஆயிரம் விவசாயிகள் சுய அடிப்படையில் இணைந்து கொண்டுள்ளனர் என விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விவசாயிகளினால் விளைவிக்கப்பட்ட நெல்விளைச்சலில் இருந்து சுமார் 65 லட்சம் கிலோ கிராம் நெல்லை விவசாய திணைக்களம் கொள்வனவு செய்துள்ளது என்றும் அறிவிக்கப்படுகின்றது.

## மின்தடை

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் -**

மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, குடாகச்சகொடியகல்உடைக்கும் ஆலை, கொக்கெலிய இராணுவமுகாம் பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# விவசாயக் கண்காட்சியும் சேவை முகாமும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யு.என்.டி.பி. மற்றும் ஹெய்லீஸ் நிறுவனங்கள் இணைந்து நடத்தும் விவசாய இயந்திர கண்காட்சியும் இலவச சேவை முகாமும் நேற்று செவ்வாய்க் கிழமையைத் தொடர்ந்து இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறும் இடங்களும் நேரமும் வருமாறு:

★நேற்று செவ்வாய்க்கிழமை (கண்காட்சி): தெல்லிப்பழை கமநலசேவைகள்திணைக்களம் காலை 9 முதல் 1.30 மணி வரை.

★இன்று புதன்கிழமை (சேவை முகாம்): பளைவீமன்காமம் வடக்கு, கிராமச் செயலகம் காலை 9 முதல் மாலை 6 மணி வரை

★ நாளை வியாழன்: (சேவை முகாம்): பலாலி கிழக்கு, பல்நோக்கு மண்டபம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. (இ)

# ஜனாதிபதி தலைமையில் கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் சப்ரகமுவ மாகாண வழிப்படுத்தும் குழுக் கூட்டம் இன்று!

வறுமையை ஒழித்துக் கட்டுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் ஜனாதிபதி அலுவலகத்தின் முக்கிய நிகழ்ச்சி திட்டமாக நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் சப்ரகமுவ மாகாண வழிப்படுத்தும் குழு கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இரத்தினபுரி மாகாண சபை கேட்போர்கூடத்தில் இன்று பிற்பகல் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு மாகாணத்தில் உள்ள அரசியல் முக்கியஸ்தர்கள், அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் கிராமசக்தி மக்கள் இயக்கம் சப்ரகமுவ மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விதம் மற்றும் அதன் முன்னேற்றம். எதிர்கால திட்டங்கள் குறித்து விரிவாக கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் பிரதேச மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அவற்றை தீர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது. (க)

# தினசரி ராசி பலன் (25.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 9ஆம் நாள் புதன்கிழமை திரியோதசித்திதி இரவு 8.46 மணி வரை பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: மூலம் மாலை 6.21வரை பின்னர் பூராடம். மரணயோகம் மாலை 6.21 வரை சுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 12.16 மணி முதல் 01.51 மணி வரை.
**சுபநேரம்** - மாலை 04.34 மணி முதல் 6.05 மணி வரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை திரியோதசி.
இன்று பிரதோஷ விரதம்.
**பிறந்த நட்சத்திர வழிபாடு**- மூலம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் வேலையாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களால் மதிக்கப்படுவார்கள்.

**ரிஷபம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். வாழ்க்கைத் துணைவருடன் வாக்குவாதங்கள் உண்டாகும். கோபம், தாழ்வு மனப்பான்மை வந்து விலகும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகள் உண்டாகும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் மந்த நிலை நிலவும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். வருவாய் உயர்வடையும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுக்கும், நன்மாற்றமும் கிடைக்கக் கூடிய நாள் ஆகும். தொழிலாளர்களுக்கு அரச ஒப்பந்தங்களில் மனத் திருப்தி உண்டாகும்.

**சிம்மம்** யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய மாற்றங்கள், செல்வாக்கு வளர்தல் போன்ற பயன்கள் கிடைக்கும். அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். உறவினருடன் மனத் தாங்கல்கள் ஏற்படும். தொழிலகத்தில் அமைதி இன்மை நிலவும். வேலை வாய்ப்பை நாடுவோர் கஷ்டமடைவார்கள்.

**துலாம்** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். எடுத்த காரியங்கள் தடைப்படும். வியாபாரம் மந்த நிலையை அடையும். கடின உழைப்பும், உற்சாகமும் இருப்பினும் ஊதியம் பற்றாக்குறையாக இருக்கும்.

**விருச்சிகம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வாக்கு வசீகரம் உண்டாகும். வெளிநாட்டு விடயங்களில் எதிர்பாரத்தவாறு கருமங்கள் அமையும். குடும்பத்தில் அன்பும், ஆதரவும் பெருகும்.

**தனுசு** அதிர்ஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். வியாபாரம் வளர்ச்சி அடையும். செய்தொழில் விருத்தியடையும். அரசு வழிச் சலுகைகளால் நன்மை கிடைக்கும். பூர்வீகச் சொத்து வந்து சேரும்.

**மகரம்** யோசனையான நாள். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். பணச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு எடுத்த காரியம் தடைப்படுப் போகும். மாணவர்களுக்கு ஞாபக சக்தி குறையும்.

**கும்பம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரிகளுக்கு மேலதிக லாபம் கிடைக்கம். உத்தியோகத்தில் அரசு மட்டத்தில் செல்வாக்கு உயரும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். வாத்தகர்களுக்கு முதலீடு லாபம் தரும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும், முதலாளிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சகோதர உறவு வலுவடையும்.

சந்திராஷ்டம நாள்; **கார்த்திகை 2ஆம், 3ஆம் 4ஆம் பாதங்கள் ரோகினி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# இலங்கையில் மின்சாரத்தில் இயங்கும் ஓட்டோ தயாரிப்பு!




2020ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் நாட்டில் தயாரிக்கப்படும் மின்சார ஓட்டோக்களைச் சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமென நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற மின்சார ஓட்டோவாகன அறிமுக நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மின்சார ஓட்டோவை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கொள்கையின் கீழ் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஓட்டோக்கள் விசேட பங்களிப்பை வழங்குகின்றன. இந்தத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்களை வலுவூட்டுவது அரசின் எதிர்பார்ப்பாகும்.

குறிப்பாக சுற்றுலாத் துறைக்கான முறையான வேலைத்திட்டத்தின் கீழ் ஓட்டோக்களைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# புதிய பழ வகை இங்கு அறிமுகம்

விவசாயத் திணைக்களம் இலங்கையின் உலர் மற்றும் ஈர வலயங்களில் பயிர் செய்யக்கூடிய புதிய பழ வகையை அறிமுகம் செய்துள்ளது.

அகுனுகொலபெலஸ்ஸ, ஏரமினியாய பண்ணையில் இந்தப் பழ வகை வெற்றிகரமான முறையில் பயிரிடப்பட்டுள்ளது.

கெக்ஃபுரூட் என்ற பெயருடைய இந்தப் பழ வகை கரட் இனத்தை விட பத்து மடங்கு கரட் நொய்டிஸ், விட்டமின் ஏ என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

இளம் மரக்கறி வகையாகவும் இதனைப் பயன்படுத்த முடிகின்றமை சிறப்பம்சமாகும். இதனை பயன்படுத்தி உணவுகளையும், பழச்சாறையும் தயாரிக்கலாம் என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது.

# டாக்ஸி மீற்றருக்கான புதிய தராதரம் அறிமுகம்!



இலங்கை கட்டளைகள் நிறுவகம் டாக்ஸி மீற்றரை அறிமுகம் செய்துள்ளது.

புதிய பொருள்களுக்கான தராதரங்கள் அடங்கிய விவரங்கள் நிறுவகத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட் டுள்ளன.

இது பற்றி மக்களின் கருத்துக்களையும், யோசனைகளையும் பெற்றுக் கொள்வது இலக்காகும் என்று நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யு.என்.எஸ்.சந்தரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கட்டளைகள் நிறுவகம் இதுவரை 122 பொருள்களுக்கான தரச் சான்றிதழ்களை வழங்கியிருக்கிறது.

இதில் 50 பொருள்கள் உணவு வகைகளாகும். ரின் மீனுக்கான தராதரமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மனித பாவனைக்கு பொருத்தமற்ற ரின் மீன் வகைகளை தமது நிறுவனமே தடை செய்தது என்று அவர் மேலும் கூறினார்.

# தேசிய ஆடிவேல் விழா இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் தேசிய ஆடிவேல் விழாஇன்று ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை தேசிய ஆடிவேல் விழா நடைபெறவுள்ளது.

144 ஆவது முறையாகவும் ஆடிவேல் விழா கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1820 ஆம் ஆண்டு முதல் நேற்று வரை செட்டியார் தெரு புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்துக்கும், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்திற்கும் இடையிலான தொடர்பை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வு இடம்பெறுகிறது.

அரசால் தேசிய விழாவாக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கும் ஆடிவேல் விழாவானது, இலங்கையர்மட்டுமின்றிஉலக வாழ் இந்துக்களும் கொண்டாடும் நிகழ்வாக உள்ளது.

செட்டியார் தெரு ஸ்ரீ புதிய கதிரேசன் ஆலய வெள்ளி இரத பவனி எதிர்வரும் 26 ஆம் திகதி சிறப்பாக இடம்பெறவுள்ளது.

நேற்றைய தினம் மாலை மஹேஸ்வர பூஜையுடன் ஆடிவேல் வேல் விழா ஆரம்பமானது.

ஆலயத்தின் 144 ஆவது வெள்ளித் தேர் திருவிழாவாக இடம்பெறும். இத் தேர் திருவிழாவின் போது வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் செட்டியார் தெருவில் இருந்து பம்பலப்பிட்டி நகருக்கான வீதி உலாவை மேற்கொள்ளவுள்ளார்.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் சுவாமி ஆலயத்தை அடையும் தேர்த்திருவிழா, இரு பொழுதுகள் அங்கு தங்கியிருந்து 29 ஆம் திகதி காலை 8 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு செட்டியார் தெரு புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை வந்தடையும்.

இந்த நிகழ்வை முன்னிட்டு புதிய கதிரேசன் மண்டபத்தில் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் கொழும்பு மாநகர் விழாக் கோலம் காண்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

காலைக்கதிர்
Kalaikkathir



# போதைப்பொருள் கடத்தலுக்கான மையமாக மாறியுள்ளது இலங்கை

## அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25

போதைப்பொருள் கடத்தலிற்கான மையமாக இலங்கை மாறியுள்ளது என சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை போதைப்பொருள் கடத்தலின் மையமாக மாறியுள்ளது. இது குறித்து எங்களிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

சில வகையான போதைப் பொருள்களை உள்நாட்டில் விற்பதற்காக கடத்திவருகின்றனர். கடந்த வருடம் நாங்கள் 1500 கிலோ கொக்கெய்னை கைப்பற்றினோம். இது பெறுமதியான போதைப் பொருள். ஆனால் இலங்கையில் இது பயன்படுத்தப்படுவதில்லை. இதன் மூலம் போதைப்பொருள் கடத்தலிற்கான தளமாக இலங்கை மாறியுள்ளது என்ற முடிவிற்கு நாங்கள் வரலாம்.

இதனை முறியடிப்பதற்கு நாங்கள் சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற தீர்மானித்துள்ளோம், நாங்கள் இந்த அடிப்படையில் செயற்படுகின்றோம்.

இந்த விடயத்தில் நான் எந்த அரசியல் தலைவரீடையும் எதிர்கொள்ளவில்லை. எந்த அமைச்சரும் இது குறித்து என்னுடன் பேசவில்லை. இந்த நிலைமையை கையாள்வதற்காக விசேட பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். நாங்கள் பலரை கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளோம். வெளிநாடுகளில் வாழ்பவர்களே இதனைத் தூண்டுவது எங்களிற்கு தெரியவந்துள்ளது. சிலர் தங்கள் சிறைகளில் இருந்தவாறே இவற்றை செய்கின்றனர். இது பெரிய பிரச்சினையாக உள்ளது.

ஆகக்குறைந்தது நான்கு பாதாள உலக குழுத்தலைவர்கள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டிகளுக்குப் பதிலாக பழவகைகள்!

கொழும்பு, ஜூலை 25

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, எண்ணெயில் செய்யப்பட்ட சிற்றுண்டிகளுக்குப் பதிலாக பழவகைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வுகளில் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மா மற்றும் எண்ணெய் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகளை வழங்குவதற்குப் பதிலாகவே பழங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு, விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை அண்மித்த இடங்களில், மா மற்றும் எண்ணெய் கொண்டு தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்படுகின்றன எனவும், இதனைத் தடுப்பதற்காக பதப்படுத்தப்பட்ட பழங்களைப் பாடசாலைக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துவது சிறந்தது எனவும் அதிகாரிளுக்குச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், பாடசாலை மாணவர்களுக்கு முன்னுதாரணமாகப் நாடாளுமன்ற மற்றும் அமைச்சரவையில் இதனை முதலில் அறிமுகப்படுத்தவுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## துப்பாக்கி இயங்காமையால் தப்பியோடிய துப்பாக்கிதாரிகள்

மாத்தறை, ஜூலை 25

மாத்தறை – கம்புறுபிட்டிய – ஹொரபாவிட்ட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு வர்த்தகர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப் பாக்கிப் பிரயோக முயற்சி தோல்வியடைந்துள்ளது.

உந்துருளியில் வந்த இரண்டு நபர்களால் இந்த துப்பாக்கி பிரயோக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அவர்களின் துப்பாக்கி இயங் காததாலேயே மேற்படி இருவரும் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'யாழ். ரத்ன' விருது – 2018 க்கு விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்., ஜூலை 25

யாழ். ரத்னா விருது மற்றும் கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வழங்கப்படுகின்ற விருதான யாழ் ரத்னா விருது – 2018 இற்கு இலக்கியம் மற்றும் எழுத்துறை, நாடகம், இசை நாடகம், நாட்டுக் கூத்து, நடனம், சங்கீதம், இசை(வயலின், வீணை), ஓவியம், சிற்பம், உலோகக்கலை ஏனையவை ஆகிய துறைகளில் கலைப் பணியாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 60 வயதைப் பூர்த்தி அடைந்த – இது வரை யாழ். ரத்னா விருதைப் பெற்றுக் கொள்ளாத– யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட – எழுத்தாளர்கள், கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் கலைத் துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்களும் மேற்படி துறைகளில் கோரப்பட்டுள்ளன. விண்ணபதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குட்பட்டவராகவும் இருக்கவேண்டும். யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுப்படுத்தும் ஆவணப் பிரதிகளுடன் 20.08. 2018 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியு மென பிரதேச செயலரும் கலாசரப் பேரவைத் தலைவருமான பொ. தயானந்தன் தெரிவித்துள்ளார்.

# லசவின் சகா கைது

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டார நாயக்கபுர பகுதியில் சுமார் 201 கிராம் 160 மில்லி கிராம் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் லச எனப்படும் கெசல்வத்த லசந்தவின் உதவியாளர் ஆவார். இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 24 லட்சம் ரூபாவாகும்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் ஒருவர் காயம்



ஹற்றன், ஜூலை, 25

திம்புளை – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் லொக்கீல் சந்தியில் நேற்று முன்தினம் பகல் 3 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொட்டகலை பகுதியிலிருந்து ஒன்றின் பின் ஒன்றாக பயணித்த வான் மற்றும் ஓட்டோ ஆகியவை லொக்கீல் சந்தியில் விபத்துக் குள்ளாகின. ஓட்டோக்கு முன்னால் சென்ற வான் லொக்கீல் சந்தியில் பாதையை மாறும் சமயத்தில் பின்னால் வந்த ஓட்டோ வானின் மீது மோதியே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

இதில் ஓட்டோ சாரதிக்கே பலத்த காயம் ஏற்பட்டுள்ளமையுடன் ஓட்டோவின் முன்பகுதி சேதமாகியுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணையை பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரபல இலங்கை நடிகர் திடீரென உயிரிழப்பு!



கொழும்பு, ஜூலை 25

இலங்கையின் பிரபல இளம் கலைஞர் இந்திக்க கினிகே காலமானார் என அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

இலங்கையின் சிங்கள கலைத்துறையின் இளம் நடிகரும், பாடகருமான இந்திக்க கினிகேவே இவ்வாறு திடீரென உயிரிழந்துள்ளார்.

கண்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு இந்திக்க உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்திக்கவின் சடலம் தற்பொழுது கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது உயிரிழக்கும் போது இந்திக்கவுக்கு 37 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

மரணத்திற்கான காரணங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.

# நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஹெரோயினுடன் பெண் கைது

கொழும்பு, ஜூலை 25

கல்கிஸை நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

26 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண்ணிடமிருந்து 22 ஹெரோயின் போதைப் பொருள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது!



வெளிநாட்டு நாணயத்தாள்களை சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவர முயற்சித்த ஒருவரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் என இலங்கை சுங்கப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் சிங்கப்பூர் நாட்டின் பிரஜை எனவும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களின் பெறுமதி இலங்கை ரூபாவில் ஒன்றரைக்கோடி ஆகும் எனவும் சுங்கப்பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# புதைக்கப்பட்ட நிலையில் குழந்தையின் சடலம் மீட்பு!



சிலாபம், வென்னபுவ பிரதேசத்தில் புதைக்கப்பட்ட நிலையில் குழந்தையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசர இலக்கத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நன்கு வளர்ந்த 5, 6 மாத குழந்தையே இவ்வாறு புதைக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட குழந்தையின் சடலம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த பெண்ணின் வீட்டுக்கு பின்னால் உள்ள கழிப்பறைக்கு அருகில் இந்த குழந்தை புதைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்த குழந்தை புதைக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது இயற்கை மரணமாக அல்லது கொலையா என்பது தொடர்பில் சிலாபம் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான இந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# பாரம்பரிய விளையாட்டுகள் காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் நடைபெற வேண்டும்

## நீர்வேலி மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நிகழ்வில் தவிசாளர் நிரோஷ்







நீர்வேலி, ஜுலை 24

தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் காலத்திற்கு உரிய மாற்றங்களுடன் நடைபெற வேண்டும் என வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நீர்வேலியில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றன. இப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் வழக்கொழிந்து போகின்றன. இது வேதனை தருகின்ற விடயம். நீர் வேலியில் வண்டில் சவாரியை சிறந்த முறையில் நடத்தக்கூடிய திடல் உள்ளது. எனினும் கடந்த சில ஆண்டுகளாக இப் போட்டிகள் நடைபெறுவதில் பல்வேறு இடையூறுகள் நிலவின. இதனால் போட்டிகள் தடைப்பட்டும் இருந்தன. இதன் பின்னர் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் வண்டில் சவாரிச் சங்கத்தினர் என்னுடன் பேசினர். எமது பக்க நடவடிக்கையாக ஆராய்ந்து பார்த்தபோது சவாரியின் போது, காளைகளுக்கு துன்புறுத்தல்கள் பிரயோகிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ் நிலையத் திற்கு விலங்குகள் ஆர்வலர்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளே தொடர்ந்து சவாரிப்போட்டிகளை நடத்துவதற்குத் தடையாக அமைந்தன என்பதை புரிந்துகொண்டேன்.

இந் நிலையில் நாம் சகலருட னும் பேச்சுக்களை நடத்தி எதிர் காலத்தில் விலங்குகள் சித்திரவதை செய்யப்படாது நல்ல பல மாற்றங்களுடன் எமது பாரம்பரிய விளையாட்டை மேற்கொள்ள ஆமோதிப்பைப் பெற்றுக் கொண்டோம். நான் கூட ஒரு மனித உரிமை செயற் பாட்டாளனாக இருந்தே தவிசாளராக பொறுப்பேற்றிருக்கின்றேன். ஆகவே நாங்கள் உயிர்களின் உரிமைகளில் வலுவான ஆர்வத்தில் இருக்கின்றோம்.

எமது சமயங்களிலும் கூட விலங்குகளைக் கடவுளாக மதிக்கின்றார்கள். வணங்குகின்றார்கள். இவ்வாறிருக்க நாம் எந்த உயிரினத்தையும் வதைக்க வேண்டியவர்கள் அல்லர். எனவே நல்ல மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு நாங்கள் இந்தத் திடலில் வெற்றிகரமாக இரண்டாவது தடவையாக தடைகள் இன்றி சவாரிப்போட்டிகளை நடத்துகின்றோம் என்பதை எண்ணி நாம் பெருமையடையவேண்டும்.

எதிர்காலத்தில் எமது பாரம்பரிய விளையாட்டுகளை முன்கொண்டு செல்லும் முகமாக பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுக்கக் கோவை ஒன்றை நாம் தயாரிக்க வேண்டும். பாரம்பரிய விளையாட்டுக்களில் நிபுணத்துவம் உடையவர்களைக்கொண்டு இதனை நாம் வகுக்க வேண்டும். அதற்காக சகலரும் ஒத்துழைக்க வேண்டும். வலி கிழக்கினை கட்டியெழுப்பும் பொறுப்புக்களிடையே நாம் இது பற்றியும் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. எமது பாரம்பரியம், பண்பாடு, வரலாறு, தொன்மை இழந்துவிட முடியாதவை. எனவே எல்லாரும் கைகோர்த்து சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவோம். இவ்வாறு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (இ

# அறநெறி பாடசாலையில் மாணிக்கவாசகர் குருபூசை







உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் மாணிக்கவாசகர் குருபூசை தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது .இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக துமி அமைப்பைச் சேர்ந்த வி.மகாசேனன் ஆ.துசேந் ஆகியோர் கலந்து கொண்டார்கள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (இ

# பருத்தித்துறை ஆலடிப் பிள்ளையார் ஆலய முகப்பு வீதியின் அவலநிலை

பருத்தி மாநகரில் உள்ள ஆலயங்களில் நகரசபைப் பிரதேசத்தில் நடுநாயகமாக அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயம் ஆலடிப் பிள்ளையார் ஆலயமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அனைத்தும் அமைந்துள்ள அற்புத ஆலயம் ஆலடிப் பிள்ளையார் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தின் முகப்பு வீதியானது கல்லூரி வீதியைச் சென்றடையும் குறுகிய தூர வீதியாகும். ஏறக்குறைய 200 மீற்றர் தூரமானதே இப்பாதையாகும். புகழ்பூத்த ஹாட்லிக் கல்லூரி அதன் மாநாட்டு மண்டபம், மாணவர் விடுதி, விளையாட்டு மைதானம் என்பவற்றுக்கு ஊடாக செல்லும் வீதியே கல்லூரி வீதியாகும். இவை மாத்திரமல்ல பருத்தி நகரை நிர்வாகம் செய்யும் நகராட்சி மன்றமும் இக் கல்லூரி வீதியிலேயே அழகுறக் காட்சி தருகின்றது.

ஆலடிப் பிள்ளையாரின் முகப்பு வீதியின் முக்கியத்துவம் பற்றி சிறிது நோக்குவோம் .....

இக் குறுகிய வீதி ஆலடிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு மட்டும் பயன்படவில்லை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள், பிள்ளையாரின் முகப்பு வீதியூடாகவே சென்று விளையாட்டு மைதானத்திற்குச் செல்கின்றார்கள்.

பிரபலமான பெண்கள் பாடசாலையான மெதடிஸ்த பெண்கள் உயர்தர மாணவிகளில் சைக்கிள்களில் வருவோர் பிள்ளையாரின் முகப்பு வீதியூடாக வந்து பாடசாலையின் பின்புற வழியூடாக பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இந்த நடைமுறை விபத்துக்களையும் நெருக்கடிகளையும் தவிர்க்கும் நோக்கில் அப்பாடசாலை அதிபரால் மேற் கொள்ளப்பட்ட ஏற்பாடாகும்.

பெருந்தொகையானவர்கள் பயன்படுத்தும் இக்குறுகிய பாதை மேடும் பள்ளமும், குண்டும் குழியுமானகவும் மழைக் காலங் களில் வெள்ளக் காடாகவும் காட்சியளிப்பதை காணலாம். இப் பாதையில் செல்வோர் முக்கியமாக மாணவிகள் மழை காலங்களில் சைக்கிள்களுடன் படும் துன்பம் வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாதவை. மழைக் காலத்திலே சேற்றிலே சிக்கி பாடசாலைக்குள் நுழையாது வீதியிலேயே திரும்பிய மாண விகளையும் கண்டுள்ளோம்.

இப் பாதையின் தெற்குப் பக்கமாக இடிந்த நிலையில் உள்ள ஒரு வீட்டின் வடக்குப் பக்க எல்லைச் சுவர் இடிந்து விழும் நிலையில் உள்ளது. பாதையின் வடக்கு புறமான பாதையில் அருகில் உள்ள வெற்றுக் காணியில் மின்சார சபையினர் பகுதடைந்த மின் தூண்களைப் பாதுகாப்பற்ற முறையில் குவித்துள்ளனர். இத் தூண்களும் பாதையில் பயணிப்பவர்களுக்கு ஆபத்தானவையாகும். இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த இப்பாதைக்கு அண்மையிலேயே நகராட்சி மன்றமும் அமைந்துள்ளது.

நகராட்சி மன்றமும் தனது பணிகளைச் சிறப்பாகவே செய்கின்றது. பழுதடைந்த எத்தனையோ பாதைகளைச் செப்பனிட்டு சேவையாற்றுகின்றது. அந்த வகையிலேயே தற்போதைய நகர பிதாவும் உறுப்பினர்களும் பருத்தி மாநகரின் அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமையைப் பாராட்டுகிறோம்.

இந்த நிலையிலேயே ஆலடிப் பிள்ளையார் முகப்பு வீதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் விரைவாகச் செப்பனிட வேண்டியது கட்டாயமாகும். நகராட்சி மன்றமோ, வீதி அபிவிருத்தி திணைக்களமோ, வீதி அபிவிருத்தி அதிகார சபையோ யாராவது பெருமனதுடன் இச் சிறு வீதியை செப்பனிட உதவ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பணிகின்றோம்.

-முருகுப்பிள்ளை தர்மலிங்கம்

# மன அழுத்தம்;

# கருத்துரைப்போரை கலந்து சிந்துப்பது சாலச் சிறந்தது!



(நேற்றைய தொடர்ச்சி)

**எல்லைகளை வகுத்துக் கொள்ளல்**

நாம் செய்ய முடிந்ததைக் காட்டிலும் அளவுக்கதிகமாக செய்ய நேரிடும் போது மன அழுத்தம் ஏற்படுகிறது. வாழ்வில் அடைய வேண்டியவற்றை நாம் அளவுக் கதிகமாக எதிர்பார்க்கிறோம். துரதிருஷ்டவசமாக இதுவே நமது மன அழுத்தத்தை அதிகரிக்கும் முதற் காரணமாகிறது. இது நமது வாழ்வில் எவை உண்மையில் இன்றியமையாதவை, நமது உண்மையான தேவைகள், விருப்பங்களை மதிப்பீடு செய்து பார்ப்பதில் பெரிதும் உதவும்.

எங்களுக்கு இயமுமோ அங்கெல்லாம், ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நீங்கள் அடைய விரும்பும் வாழ்க்கை மாற்றங்களின் எண்ணிக்கையை குறைக்க முயல வேண்டும். உதாரணமாக நீங்கள் திருமணம் செய்து கொள்வது, ஒரு வீட்டை வாங்குவது, வீட்டைப் புதுப்பிப்பது, குழந்தையைப் பெறுவது, வேறு பணியில் சேருவது இவையனைத்தையும் ஒரே ஆண்டில் செய்வது உங்கள் மன அழுத்தத்தை அதிகரிக்கும்.



**திறமையான கருத்துப் பரிமாற்றம்**

நாம் உடன்படவும் உதவவும் விரும்புவதால் சில நேரங்களில் கண்டிப்புடன் இருப்பது கடினமே. நாம் பிறர் வேண்டுகோளை மறுக்க இயலாததையும் உணரலாம். இதனால் நாம் திணறலாம். நமது உடன்பாட்டு மனப்பான்மையால் சிக்கல் களில் சிக்கிக் கொள்வதையும் அறிகி றோம். இதன் விளைவாக நாம் கோபத் துக்கும் உதவி செய்ய இயலாமைக்கும் ஆளாவதை உணரலாம். நாம் நம் உடல் நலனை நம் நன்மையைப் பேண விரும் பினால் 'இல்லை' என்று கூறப் பழகுவது மிகவும் இன்றியமையாதது.

ஒரு வேண்டுகோளை மறப்பதற்கு கீழ்க்கண்டவை உதவும்.–

✼ வேண்டுகோள் விடுப்போனின் வேண்டுகோளை ஏற்பது

✼ மறுப்பதற்கான உங்கள் காரணங்களைக் கூறுவது

✼ திடமாக 'இல்லை' என்று மறுப்பது.

உதாரணமாக இன்றிரவு நீங்கள் சில பணிகளை நான் உங்களுக்குச் செய்ய வேண்டுமென விரும்புவதை அறிகிறேன், (அவரது வேண்டுகோளை அவருக்கே திருப்பிச் சொல்லலாம்) எனக்கு அவ்வாறு செய்ய விருப்பமே என்றாலும் இன்று இரவு என் குடும்பத்தில் வேறு சில திட்டங்கள் ஏற்கனவே வகுத்து விட்டோம் (காரணங்களைக் கூறல்) எனவே உங்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் உள்ளேன். (முடியாது என்று கூறுதல்)

இவ்வாறு நீங்கள் மறுத்துக்கூறுவதற்கு முன்னர், உங்களுடைய முடிவான பதிலை வீட்டில் கண்ணாடியின் முன் நின்று கூறிப்பழக வேண்டும். உங்கள் உடல்மொழி இதில் முக்கிய பங்காற்றும். நேராக அமர்ந்தோ, நின்றோ, நெஞ்சை நிமிர்த்தி, கண்களோடு கண்கள்இணைத்துமென்மையான.ஆனால் உறுதியான குரலில் பேச வேண்டும்.

**காலத்தைச் சரியாக கையாளுதல்**

நேரம் போதாமையால் அடிக்கடி நீங்கள் மன அழுத்தத்தை உணர்வீர்கள். விரிவாக காலத்தைக் கையாளும் திட்டங்களை விளக்க முடியாமற் போனாலும் சில பொதுவான முறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இலக்குகளை முடிவெடுத்து முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரி சைப்படுத்துதல்.

'இதைச் செய்' என்ற பட்டியலை வைத்திருக்க வேண்டும்.

உங்கள் இலக்குகளையும், செய்கைகளையும் முன்னுரிமைப்படுத்தி முக்கியமானவற்றை முதலில் செய்ய வேண்டும்.

ஒரு மணி நேரம் திட்டமிடல் 3 – 4 மணி நேரப் பணி மீதப்படுத்துமாதலால் செய்முறை படுத்துவதற்கு முன்னர் நன்கு திட்டமிட வேண்டும்.

நீங்கள் ஆக்கபூர்வமான மனநிலையில் உள்ள நேரத்தில் உங்கள் பெரும்பாலான செயல்களைச் செய்யவேண்டும். உதாரணமாக, சிலர் மதிய நேரங்களைக் காட்டிலும் காலை நேரங்களில் அதிகமா கப் பணியாற்றுவார்கள். அத்தகு செயலாக்க நேரங்களில் விருந்தாளிகள், தொலை பேசி பேச்சு முதலியவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.



உங்களுடைய தொலைபேசி பேச்சுக்களை ஒரே நேரத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய செயல்களில் சிலவற்றைப் பிறருக்கு ஒப்படைக்கப் பழக வேண்டும்.



இடைநிறுத்தவும், ஓய்வு கொள்ளவும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும்.

**எதிர்மறை எண்ணங்களை ஆராய்ந்து தடுங்கள்**

நமக்கு நாமே பேசிக்கொள்வது நமது எண்ணங்களையும் மனநிலையையும் பாதிக்கும். எதிர்மறை எண்ணங்களில் ஈடுபடுபவர்கள் வெகு எளிதில் கவலைக்கும் சோர்வுக்கும் ஆளாவார்கள்.

உதாரணமாக இரண்டு மனிதர்கள் தத்தமது அலுவலகங்களுக்குள் வருகிறார்கள். அவர்களது முதலாளிகள் அவர்களைக் கோபத்துடன் பார்க்கிறார்கள். ஒருவர் உடனே குற்ற உணர்வுடன் தனக்குத்தானே நான் நேற்று ஏதோ தவறு செய்திருப்போம் போலுள்ளது என்று கூறிக்கொள்கிறார். அவர் அதைப் பற்றியே கவலைப்படத்தொடங்கி பணியில் சரிவர ஈடுபட முடியாமற் போகிறார். மற்றவரோ அந்தச் சூழ்நிலையைப் புறக்கணித்துவிட்டு பணியில் ஈடுபடத்தொடங்குகிறார். அவர் தனக்குள்தானே, இன்று காலையில் முதலாளி ஏதோ கெட்ட மன நிலையில் உள்ளார் போலுள்ளது. ஏதோ ஒன்றுஅவர்மனதைப் பாதித்ததிருக்க வேண்டும். அவர் மகிழ்ச்சியுறுமாறு நான் என்னவாவது செய்ய முடியுமா? என்று கூறிக் கொள்கிறார். இருவர் இருந்ததும் ஒரே சூழ்நிலை. ஆனால் அவர்களது எண்ணங்களும், செயல்களும் முற்றிலும் மாறானவை.

மன அழுத்தத்தை உண்டு பண்ணும் கீழ்க்கண்ட சிலவகை எண்ணங்களைத் தவிருங்கள்:

மன ஆய்வு (Mind Reading )

உதாரணமாக எனது கணவர் என் சமையலை வெறுக்கிறார் என்று நினைக்கிறேன்.

சோதிடம் கூறுதல், உதாரணம் இந்தத்திட்டம் உறுதியாகத் தோல்வியுறும் பாருங்கள்.

தீய விளைவுகள் வருமென அளவுக்கதிகமாக அச்சமுறுதல் உதாரணம்: இந்தத் தவறுக்காக நான் நிச்சயமாக திட்டப்படுவேன்.

நிலை தடுமாற்றமுறுதல் உதாரணம்: இதற்கு பிறகு நான் எப்போதும் யாரையும் எதிர்கொள்ள முடியாமற் போவேன்.

அதிகம் பொதுமைபடுத்தல் உதாரணம்: ஒவ்வொருவரும் இனி என்னை தாழ்வாக நோக்குவார்கள்

உதாரணம்: நான் எதைச் செய்தாலும் அதுதிறமையானதாக இருந்துதீர வேண்டும்.

திறம்பட செய்வேன் எண்ணம் உதாரணம்:நான் ஒன்று இதைத் திறமையுடன் செய்து தீரவேண்டும் அல்லது செய்யவே முயற்சி எடுக்காதிருக்க வேண்டும்.


**சமூக துணை**

பெரும்பாலான மக்கள், தாம் மன முடையும்போது தமது வேதனைகளைப் பிறருக்கு எடுத்துரைப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறார்கள். முயற்சி செய்து நல்ல, தீர்ப்பு ஏதும் கூறாது கேட்பவரை அடையாளங் களை காணுங்கள். உதாரணமாக உங்களுக்கு நம்பிக்கைக்குரிய குடும்ப உறுப்பினர், அல்லது நெருங்கிய நண்பர், அல்லது நீங்கள் நம்பும், எளிமையாகப் பழகும் ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். நன்கு கேட்போரிடம் மனத்திறந்து பேசுதல் ஒருவரது சிக்கலின் உண்மைநிலையை, இயல்புருவைக்காண உதவும் மனதிலேயே புதைத்து வைத்து குமுறும் விசயங்களை பிறருக்கு எடுத்து ரைப்பதே மன அழுத்தத்தைப்பெருமளவில்குறைக்கும்.

நாம் எப்போது உதவியை நாடவேண்டும்?

உங்களுக்கு ஆழ்ந்த மன அழுத்தம் ஏற்படும்போதும் எதிர்வரும் மன அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாமற் போகும் போதும் தொழில்ரீதியான கருத்துரைப்போர்களைக் கலந்து சிந்திப்பது மிகவும் அறிவுபூர்வமானது. மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்திச் சீராக்கும் நுட்பங்களை நீங்கள் கற்றுக்கொள்ளலாம். சில சமயங்களில் சில அறிகுறிகளைத் தணிக்க மருந்துகளும் தேவைப்படலாம். மென் மையான சோர்வைகற்றும் மயக்கப் பொருள்கள் அம்மருந்துகளில் அடங்கி யிருக்கலாம். உங்கள் மருத்துவர்அத்தகையமருந்துகள்உங்களுக்குத் தேவைப்படும் என்றால் பரிந்துரைப்பார்

(முற்றும்)




# கல்விக் கதிர் வெளியீடு 07

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்


### பகுதி – II

நேரம் 1 மணி. 15 நிமிடம்

15. பெறப்படும் எண்ணைஎழுதுக.
300 - 85 + 9 = ..........................................................

16. கழிக்குக.
784 - 126 =..........................................................

17. பெருக்குக.
97 X 6 =..........................................................

18.




1. வட்டத்தில் உள்ள எண்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச்சிறியஎண்ணை எழுதுக?
..........................................................
2. அவ்வெண்ணைஎழுத்தில் எழுதுக?
..........................................................

19.இருபது கொய்யாப் பழங்களில் 3/10ஐ ரவியும் மீதியை கீதாவும் பெற்றனர். கீதா பெற்ற கொய்யாப் பழங்கள் எத்தனை?
..........................................................

20.1. | 00 : 45 | எனும் நேரத்தை சாதாரண நேரக் கடிகாரத்தில் எழுதுக
..........................................................

21. ஒருவர் 500 ரூபாய்த்தாள் ஒன்றை கொடுத்து ரூபாய் 8.50 பெறுமதியுடைய 12 கொப்பிகளைவாங்கினார்.எனின் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?
..........................................................

22. 1 1/2l பழப்பானம் 5 குவளைகளில் சமமாக இடப்பட்டது. ஒரு குவளையில் உள்ள பழப்பானத்தின் அளவு யாது?
..........................................................


23.



இவ்வுருவின் சுற்றளவுயாது?
..........................................................

24. 400 இனிப்புக்களில் 40 ஐ மீதப்படுத்திய பின் ஏனையவற்றை ஒரு பைக் கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுகளாக பொதி செய்யப்பட்டுள்ளது?
1. சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப்பட்ட இனிப்புக்களின் எண்ணிக்கை யாது?
..........................................................
2.அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுக்கள் செய்யப்பட்டன?
..........................................................

25. ஒரு கீலோக்கிராம் அரிசியின் விலை ரூபாய் 56 ஆகும். 5kg 250g அரிசியின் வியைாது?
..........................................................

26.எதிரே தரப்பட்டுள்ள உருவில் 1/2 ஐ நிறந்தீட்டுக



27.ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப் பட்டியலின் ஒருபகுதி கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பால்மாபைக்கற் | 1 | ரூ350.00 |
| தேயிலை | 1kg | ரூ 824.00 |
| சீனி | 1kg | ரூ 95.00 |

ஒருபாடசாலையில் சிரமதானநிகழ்வில் பங்குபற்றியவர்களுக்குப் பால் தேனீர் வழங்குதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளஅட்டவணையில் காட்டியவாறு பொருள் கள் வாங்கப்பட்டன.

1. விலைப்பட்டியலுக்கு ஏற்ப அட்டவணையை நிரப்புக

| வாங்கியபொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| பால்மா | 4 பக்கெற்றுக்கள் | 1400 | 00 |
| தேயிலை | 250 g | ........... | ........... |
| சீனி | 2 kg | ........... | ........... |
| | மொத்தம் | ........... | ........... |

2.பால் தேனீரைத் தயாரிக்கும் போது முதலில் 4 லீற்றர் 750 மில்லிலீற்றரும் இரண்டாவதாக 3 லீற்றர் 450 மில்லிலீற்றரும் தயாரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட பால் தேனீரின் மொத்த கனவளவு யாது?
..........................................................

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக


28. இரவில் உலவித் திரியும் விலங்கு

1. ஊர்க்குருவி 2. மலைநாகணவாய் 3. நத்தை 4. கிளி






புதையலை எடுக்க, கடலின் அடித்துக்குச் சென்று பைரேட்ஸ் தாத்தாவுக்கு கப்பலுக்குத் திரும்பும் வழியைக் காட்டுங்க!



## தந்தையை மிஞ்சிய தெனாலிராமனின் மகன்

ஒரு சமயம் அரபு நாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு ஓர்அதிசய ரோஜா செடி ஒன்றை பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்த செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந் தன. அங்கு வந்த தெனாலிராமனின் மகன் அதை பறித்து தனது தாய்க்குப் பரிசாக கொடுக்க நினைத்து பூக்களை பறிக்க தொடங்கினான். பூக்களைப் பறித்துக்கொண்டு இருக்கும் போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்டனர்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ண தேவராயரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலி ராமன் காவலர்களை பார்த்து "என்மகனை எங்கே அழைத்துக்கொண்டு செல் கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவர்களோ! உங்கள் மகன் ரோஜா பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களை பார் என்று அவன் கைகளை காண்பிக்கச் செய்தனர்.

தெனாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் தன் மகனை காப்பாற்ற விரும்பிய தெனாலி சிறுது நேரம் யோசித்து தான் அணிந்தி ருந்த மேலாடையை கழற்றி மகன் மேல் போர்த்திவிட்டான். இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்த துணி என் மகனை காப்பாற்றும் என்று கூறி விட்டுச் சென்றான்.

புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா? தெனாலிமகன் தந்தை கூறியதை யோசிக்க தொடங்கினான். உடனே ஒவ்வொரு பூக்களாக சாப்பிட ஆரம்பித்தான். துண்டு மூடி இருபதனால் அவன் பூக்களை சாப்பிடுவதை காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை அரண்மனைக் காவலர்கள் தெனாலிராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னால் அழைத்துச் சென்றனர்.

காவலர்கள் மன்னரை பார்த்து "அரசே! தெனாலி ராமனின் மகன் பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்தக் குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறினர்.

மன்னரும் எல்லாவற்றையும் கேட்டறிந்து, பின்னர் அரசர் காவலர்களை பார்த்து, "திருடிய பூக்கள் எங்கே?" என்று கேட்டார்.

காவலர்கள் மன்னரை பார்த்து, "பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளது" என்று காவலர்கள் கூறினர்.

அரசர் தெனாலி மகனை பார்த்து, "உன் கைகளை காட்டு" என்று கூறி னார்.அவனும் வெறும் கைகளை காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை.மன்னர் தெனாலிமகனை பார்த்து, "நீ பறித்த பூக்கள் எங்கே?" என்று கேட்டார்

அவனோ! மன்னரைப் பார்த்து, "நான் பூக்கள் எதுவும் பறிக்கவில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படி செய்தார்கள்" என்று கூறினான்.மன்னரும் அந்த இரண்டு காவலர்களை திட்டி அனுப்பிவிட்டார். தெனாலியும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் என்று சிரித்துக்கொண்டே வீட்டிற்கு புறப்பட்டனர்.

# கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் ஆளுநரிடம் கலந்துரையாடப்பட்டிருக்கின்றதாம்!

## இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளாக இருப்பவர்களை அரச தொழில் வெற்றிடங்களுக்கு நியமிப்பது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளோம் என்று நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி ஹிழுறியா வித்தியாலயத்தில்80 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள வகுப்பறை கட்டட அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் யாசீர் அரபாத் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் பங்கேற்று உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

காத்தான்குடி தாருஸ்ஸலாம் வித்தியாலயத்தில் 60 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இரு மாடி வகுப்பறை கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் முனீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விலும் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் –

‘காத்தான்குடி கல்வி கோட்டம் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்காக நாங்கள் எப்போதும் எம்மால் இயன்ற பங்களிப்புக்களை வழங்கி வருகின்றோம். பாடசாலைகளுக்கு இடையில் ஒற்றுமையுடன் கூடிய புரிந்துணர்வு இருக்க வேண்டும். கல்வித்துறையில் நாங்கள் முன்னேற்றம் காண அது மிக முக்கியம.

நவீன யுகத்தில் வாழ்கின்ற மாணவர்கள் அதற்கேற்றாற்போல் தமது கல்வித்துறைகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், புதிய துறைகளை தெரிவு செய்வதன் ஊடாக போட்டி மிகுந்த தொழிற்சந்தையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

நாட்டில் பட்டதாரிகள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு அரச வேலைவாய்ப்புக்கள் இல்லை. அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியும் பலருக்கு இன்னும் தீர்வில்லை. அரசாங்கம் நெருக்கடிகளுக்கு மத்தியில் இருப்பதால் அவர்களுக்கு நிரந்தர தீர்வை வழங்க முடியாதுள்ளது.

ஒவ்வொருவருடமும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளியேறிக்கொண்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தொழில் வழங்கும் வாய்ப்பு – வசதி அரசாங்கத்திடம் இல்லை. இருப்பினும் பட்டதாரிகள் விடயத்தில் நாங்கள் தொடர்ந்தும் பேசி வருகின்றோம்.

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் விடயம் சம்பந்தமாகவும், இருக்கின்ற அரசாங்க தொழில் வெற்றிடங்களுக்கு அவர்களை நியமிப்பது சம்பந்தமாகவும் ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# களுகங்கை செயற்றிட்டம் ஊடாக 25 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி



கொழும்பு, ஜூலை 25

மொரகஹகந்த களுகங்கை செயற்றிட்டத்தினூடாக 25 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புடன் ஒன்றிணைக்கும் வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மகாசங்கத்தினர் உள்ளிட்ட ஏனைய மதத் தலைவர்கள், சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, காமினி ஜயவிக்கிரம பெரேரா, மஹிந்த அமரவீர, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜோன் அமரதுங்க, மஹிந்த சமரசிங்க, இராஜாங்க அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, பாலித்த ரங்கே பண்டார, பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் ஆளுநர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் உள்ளிட்ட அதிதிகளும், மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, மகாவலி பணிப்பாளர் நாயகம் சரத் சந்திரசிறி விதான உள்ளிட்ட அதிகாரிகளும் பங்குபற்றினர்.

# மொரகஹந்த புத்தபெருமான் சிலை ஜனாதிபதியால் திறப்பு



கொழும்பு, ஜூலை 25

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டின் ஒரு பக்கத்தில் கருங்கல்லால் வடிக்கப்பட்ட 27 அடி உயரமான புத்த பெருமானின் திருவுருவச் சிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திரை நீக்கம் செய்தார்.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணம் செய்ய புத்த பெருமானின் திருவுருவச் சிலையை நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைத்த ஜனாதிபதி மலர் தூவி வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# ஓகஸ்ட் மாதம் விடுமுறைக்கு பின் மாணவர்களுக்கு சீருடை வவுச்சர்

கொழும்பு, ஜூலை 25

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்கான சீருடையை வழங்குவதற்கு தேவையான வவுச்சர் மூலமான பணம் ஓகஸ்ட் மாதம் விடுமுறைக்கு பின்னர் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என இராஜாங்க செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதா ரண தெரிவித்தார்.

43 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கும், பிரிவெனாக்காளில் கல்வி பயில்வோருக்கும் தேவையான துணி வகைகளை பண வவுச்சர் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த முறையைப் போன்று இம்முறையும் இந்த வவுச்சர் நடைமுறை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது எனவும் இராஜாங்க செயலாளர் குறிப்பிட்டார்.

இதற்குத் தேவையான நிதி அரசால் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒருவருக்கு ஒதுக்கப்படும் நிதி சுயாதீனக் குழு மூலம் தீர்மானிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கு)

# பாதுகாக்கப்பட்ட வனாந்தரங்களில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு பத்தாயிரம் படை வீரர்கள்!



பாதுகாக்கப்பட்ட வனாந்தரங்களில் பெரியளவில் முன்னெடுக்கப்படும் மோசடிகளைக் கட்டுப்படுத்த இராணுவ தொண்டர் படை அணியைச் சேர்ந்த பத்தாயிரம் பேர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.


இதற்கான முயற்சிகள் வனஜீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் பல பாகங்களில் பாதுகாக்கப்பட்ட வனாந்தரங்கள் உள்ளன. இங்குள்ள நான்காயிரம் சதுர கிலோ மீற்றருக்கு மேலான நிலப்பரப்பில் மோசடிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தகவல் கிடைத்துள்ளது.

பெறுமதி வாய்ந்த விருட்சங்களை வெட்டி வீழ்த்துதல், யானைகளைக் கொன்று தந்தங்களை எடுத்தல், அபூர்வ தாவரங்களையும் விலங்கினங்களையும் விற்பனை செய்தல், போதைப் பொருள் கடத்தல் முதலான குற்றச் செயல்கள் பற்றி அறிவிக்கப்படுகின்றது.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் கும்பல்களைக் கைது செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களனி கங்கையில் ஏற்படும் வெள்ளத்தை தடுக்க கொங்கிரீட்டு அணைக்கட்டு




களனி கங்கையில் ஏற்படும் வெள்ளத்தை தடுக்க ஹங்வெல்லையில் இருந்து முகத்துவாரம் வரையில் கொங்கிரீட் அணைக்கட்டுகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என காலநிலை அனர்த்தத்தைக் கட்டுப்படுத்தும் பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நதியின் இரு மருங்கிலும் 3 மீற்றர் உயரத்தில் இரண்டு மதிலும், கொங்கிரிட் அணைக்கட்டுகளும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் காலநிலை அனர்த்தத்தைக் கட்டுப்படுத்தும் பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

# வடகொரியாவில் ஏவுகணை சோதனை மையம் அழிப்பு

## செய்மதிப்படம் வெளியீடு






பியாங்யாங், ஜூலை 25

வடகொரியா தங்களது ஏவுகணை சோதனை மையத்தை அழிக்கும் செய்மதி புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதச் சோதனை மற்றும் ஏவுகணை சோதனைகள் நடத்தியதால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் நிலவியது. எனவே அதை முடிவுக்குக் கொண்டுவர தீவிர ஏற்பாடுகள் நடைபெற்றன.

வடகொரியா–தென்கொரியா இடையே அமைதி பேச்சு நடந்தது. வடகொரியா ஜனாதிபதி கிம்ஜாங் உன், தென்கொரிய ஜனாதிபதி ஜயே மூன் ஆகியோர் பேச்சு நடத்தினர்.

இந்த பேச்சின் விளைவாக வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் தனது மிரட்டல் போக்கை கைவிட்டு அமெரிக்காவுடன் சமரசமாகச் செல்ல முன்வந்தார். அதன்பின்னர் பேச்சுக்கான கதவுகள் திறந்தன. இதற்காக சிங்கப்பூரில் கடந்த ஜூன் 12 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் ஆகியோருக்கு இடையே வரலாற்று சிறப்பு மிக்கச் சந்திப்பு நடைபெற்றது.

அப்போது இருநாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில், வடகொரியாவில் உள்ள அணு ஆயுதங்கள் அனைத்தையும் அழித்து விடுவதாக கிம் ஜாங் உன் ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

ஆனால், அதன் பிறகு அணு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையில் வடகொரியா வேகம் காட்டாதமையால் அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்க முடியாது என அமெரிக்கா சமீபத்தில் தெரிவித்தது. இதனால் இருநாடுகளுக்கும் இடையே மீண்டும் மோதல் போக்கு உருவாகும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், சிங்கப்பூர் ஒப்பந்தத்தின் போது கிம் அளித்த ஒப்புதலை நிறைவேற்றும் விதமாக அந்த நாட்டில் சோகே எனும் இடத்தில் உள்ள றொக்கெட் ஏவுதளத்தை அழிக்கும் நடவடிக்கையை வடகொரியா தொடங்கி விட்டது. இதற்கான செய்மதி அந்த நாட்டு ஊடகம் வெளியிட்டுள்ளது.

வடகொரியா, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை தயாரிக்கவும், அணு ஆயுத சோதனைகளை மேற்கொள்ளவும் இந்த சோகே றொக்கெட் ஏவுதளம் முக்கிய பங்காற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரீஸில் ஏற்பட்ட காட்டு தீ விபத்தில் சிக்கி 7 பேர் பலி



கிரீஸ் நாட்டில் ஏற்பட்ட திடீர் காட்டுத் தீ விபத்தில் சிக்கி 7 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸின் மேற்கு கடற்கரைப் பகுதியிலுள்ள வனப்பகுதியில் திடீர் காட்டுத் தீ விபத்து ஏற்பட்டது. பற்றி எரியும் காட்டுத் தீ, மரங்கள் இருக்கும் மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருகின்றமையால் அப்பகுதி முழுவதும் கடும் புகைமூட்டமாக காட்சியளிக்கிறது.

இதனால், விபத்து நிகழ்ந்த பகுதியை அண்மித்துள்ள சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 200இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் கருகி சேதமடைந்துள்ளன.

வனப்பகுதியில் ஏற்பட்ட இந்தத் திடீர் தீ விபத்தில் அவ்வழியாக கார்களில் சென்ற பயணிகள் பலர் சிக்கினர். இதில், இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 56இற்கும் மேற்பட்டவர்கள் கடுமையான தீக்காயம் அடைந்துள்ளனர் என்றும் கிரீஸ் சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், முன்னெச்சரிக்கை காரணமாக மேற்கு ஏதென்ஸ் பகுதியில் வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீயை அணைக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால் ஐரோப்பிய நாடுகளின் உதவியை கிரீஸ் அரசு நாடியுள்ளது.

# முடிவுக்கு வருகிறது ஜூலியன் 6 ஆண்டு கால நிழல் வாழ்க்கை




விக்கிலீக்ஸ் வலைதள நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு அளிக்கப்பட்டு வந்த அரசியல் தஞ்சத்தை ஈக்வடார் அரசு ரத்துச் செய்ய முடிவு செய்துள்ளமையால், அவரின் 6 ஆண்டு கால நிழல் வாழ்க்கை முடிவுக்கு வரவுள்ளது.

அமெரிக்க இராணுவம் தொடர்பான ரகசிய கோப்புகளை விக்கிலீக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட அதன் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே (வயது 45) மீது நடவடிக்கை எடுக்க, அமெரிக்கா தீவிர நடவடிக்கை எடுத்தது.

இதற்காக, அவரை கைது செய்ய அமெரிக்கா முயற்சி செய்தது. இதனையடுத்து ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகருக்கு அசாஞ்சே சென்றார். அங்கு அவருக்கு எதிராக வன்புணர்வு வழக்கு பதிவு செய்யப்பட்டமையால், கைது நடவடிக்கையை தவிர்ப்பதற்காக லண்டன் சென்று அங்குள்ள ஈக்வடார் தூதரகத்தில் 2012 ஆம் ஆண்டு அரசியல் தஞ்சம் புகுந்தார். இதனால் கடந்த 6 ஆண்டுகளாக நிழல் வாழ்க்கை வாழ்ந்து வரும் அவரைக் கைது செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில், ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ள அசாஞ்சேவை தூதரகத்தை விட்டு வெளியேற்ற ஈக்வடார் அரசு முடிவு செய்துள்ளது. லண்டனில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் மாநாட்டில் ஈக்வடார் ஜனாதிபதி லெனின் மோரெனோ கலந்துகொண்டார்.

அப்போது, நடைபெற்ற பிரிட்டன் அதிகாரிகளுடனான சந்திப்பின்போது, அசாஞ்சேவை ஈக்வடார் தூதரகத்தில் இருந்து வெளியேற்றி பிரிட்டனிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தை செயற்படுத்த அவர் ஒப்புக்கொண்டார்.

அதன்படி அடுத்த வாரம் அல்லது அடுத்த சில தினங்களில் அசாஞ்சேவுக்கு அளிக்கப்பட்டு வந்த அரசியல் தஞ்சத்தை இரத்துச் செய்து அவர் தூதரகத்தை விட்டு வெளியேற்றப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு அவர் வெளியேற்றப்படும் பட்சத்தில், பிணை விதிமுறைகளை மீறியமை என ஏற்கனவே அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கின் அடிப்படையில் பிரிட்டன் அரசு அவரைக் கைது செய்ய வாய்ப்புள்ளது.

இது மட்டுமல்லாமல், அமெரிக்க இராணுவம் தொடர்பான ரகசிய கோப்புகளை விக்கிலீக்ஸ் வலைத்தளத்தில் வெளியிட்டது தொடர்பாக அசாஞ்சேவை பிரிட்டன் அரசு அமெரிக்காவிடம் ஒப்படைக்கவும் அதிக வாய்ப்புள்ளது எனவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் இன்று நாடாளுமன்ற தேர்தல்; பாதுகாப்புக்கு 3 லட்சத்து 70 ஆயிரம் வீரர்கள்!

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. பாதுகாப்புக்காக 3 லட்சத்து 70 ஆயிரம் வீரர்களை இராணுவம் குவித்துள்ளது. எனினும், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கடந்த ஆண்டு ஜூலை மாதம் பதவி நீக்கப்பட்டார். தற்போது இடைக்கால அரசு பொறுப்பில் உள்ளது. இந்நிலையில், நாடாளுமன்ற தேர்தல் நாளை நடைபெறுகிறது. காலை 8 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கி, மாலை 6 மணிக்கு முடிகிறது.

இந்தத் தேர்தலில் ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் – நவாஸ் (பி.எம்.எல்.என்) கட்சிக்கும், முன்னாள் கிரிக்கெட் வீரரும் அரசியல் வாதியுமான இம்ரான் கானின் பாகிஸ்தான் தெரிக் இ இன்சாப் (பி.டி.ஐ) கட்சிக்கும் இடையில்தான் முக்கிய போட்டி நிலவுகிறது.

எனினும், பிலாவல் புட்டோ சர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியும், அதன் கூட்டணி கட்சியான முத்தாஹிதா மஜ்லிஸ் இ அமால் கட்சியும் கணிசமானத் தொகுதிகளைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய எதிர்க்கட்சியான பி.டி.ஐ., இந்தத் தேர்தலில் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் உள்ளது.

ஆட்சிக்கு வந்தால், ஊழலை ஒழிப்போம், சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்று இம்ரான் கான் தீவிர பிரச்சாரம் செய்துள்ளார். அதற்கு பலன் கிடைக்கும் என்று கூறுகின்றனர்.

இந்தத் தேர்தலில் 10.5 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் நாடாளுமன்ற தொகுதிக்கும், மாகாண தொகுதிக்கும் என 2 வாக்குகளைப் பதிவு செய்வார்கள். பாகிஸ்தானில், சிந்து, பலுசிஸ்தான், பஞ்சாப், கைபர் பக்துன்கவா ஆகிய 4 மாகாணங்கள் உள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுடன் இந்த 4 மாகாணங்களுக்கும் நாளை வாக்குப் பதிவு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு 272 உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். 70 இடங்கள் நியமன உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, 272 இடங்களில், 137 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் கட்சி ஆட்சி அமைக்க தகுதி பெறும். இந்நிலையில், ஆளும் பி.எம்.எல்.என் கட்சியினர் பலர் இம்ரான் கட்சிக்கு தாவியுள்ளனர். பலர் கட்சியில் இருந்து விலகி சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்.

இதன் பின்னணியில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யும் ராணுவமும் இருக்கின்றது என நவாஸ் ஷெரீப் கட்சி நிர்வாகிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். அதனால் தேர்தல் நியாயமாக நடக்குமா என்பதே கேள்விக் குறிதான் என்று சந்தேகம் எழுப்பி உள்ளனர்.

இதற்கிடையில், தேர்தலைச் சீர்குலைக்க தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 13 ஆம் திகதி மஸ்துங் பகுதியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், 149 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதையடுத்து, தேர்தலை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்த 3 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களை ராணுவம் குவித்துள்ளது. எனினும், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

பாகிஸ்தான் வரலாற்றில் இது வரை எந்தப் பிரதமரும் 5 ஆண்டு முழுவதும் பதவி வகித்ததில்லை.

**சிறையில் நவாஸ் கவலைக்கிடம்**

இதேவேளை, ஊழல் வழக்கில் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், ராவல் பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. மருத்துவர்கள் குழு அவரை ஆய்வு செய்தது. இதயம், சிறுநீரக பாதிப்பு காரணமாக அவர் கவலைக்கிடமாக இருக்கன்றார் என கூறிய மருத்துவர்கள் உடனடியாக அவரை மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தனர்.

தற்போது அவருக்குச் சிறை வளாகத்திலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர் விரைவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படலாம் என்று சிறைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



# ஸ்டெர்லைட் ஆலை பகுதியில் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளது!

## மத்திய அரசு நிறுவனம் அறிக்கை



தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் நிலத்தடி நீரில் கடுமையான மாசுபாடு ஏற்பட்டிருக்கிறது என மத்திய நிலத்தடி நீர் வாரியம் அறிக்கை அளித்துள்ளது.

இதுகுறித்து மாநிலங்களவையில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, மத்திய நீர்வளத்துறை இணையமைச்சர் அர்ஜுன் ராம் மேஹ்வால் பதிலளித்தார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு –

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலை அமைந்துள்ள பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் மத்திய நிலத்தடி நீர் வாரிய அதிகாரிகள் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர். இதில், அங்குள்ள நிலத்தடி நீரில் அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிக அளவில் காட்மியம், குரோமியம், மெக்னீசியம், இரும்பு மற்றும் ஆர்சேனிக் ஆகிய உலோக மாசுகள் இருப்பது தெரியவந்துள்ளது.

அதேபோல், தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் அளித்துள்ள ஆய்வறிக்கையில், ஸ்டெர்லைட் ஆலையை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நிலத்தடி நீரில் இரும்பு, நிக்கல், காட்மியம், புளூரைடு ஆகிய உலோக மாசுக்கள் கலந்திருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது என அர்ஜுன் ராம் மேஹ்வால் தெரிவித்தார்.

நிலத்தடி நீர் மற்றும் காற்றில் அதிக அளவு மாசுக்களை உண்டாக்குவதால்ஸ்டெர்லைட்ஆலையை மூடக் கோரி, கடந்த மே 22 ஆம் திகதி தூத்துக்குடியில் பெரிய அளவில் போராட்டம் நடைபெற்றது. இதில், போராட்டத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(கு)

# ருவாண்டா சென்றடைந்தார் மோடி; ஜனாதிபதி பால் ககமே உடன் சந்திப்பு!

## இந்தியாவின் பரிசாக ருவாண்டாவுக்கு 200 பசுக்கள்



ஆபிரிக்க நாடுகள் சுற்றுப்பயணத்தில் முதல் பயணமாக ருவாண்டா சென்றடைந்த பிரதமர் மோடி அந்தநாட்டு ஜனாதிபதி பால் ககமேவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

பிரதமர் நரேந்திர மோடி ருவாண்டா, உகாண்டா, தென்னாபிரிக்கா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு சுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ளார். 5 நாள்கள் சுற்றுப்பயணத்தின் முதல் பயணமாக ருவாண்டா நாட்டுக்கு பிரதமர் மோடி சென்றார். ருவாண்டா தலைநகர் கிகாலி சர்வதேச விமான நிலையம் சென்றடைந்த மோடியை அந்தநாட்டின் ஜனாதிபதி பால்ககமே நேரில் சென்று வரவேற்றார்.

இதைத்தொடர்ந்து, பால் ககமே மற்றும் மோடி இருவரும் தனியாக சந்தித்து பேச்சு நடத்தினர். இந்த சந்திப்பின் போது இரு தரப்பு உறவுகள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

பின்னர், இருவரும் கூட்டாக பங்கேற்ற செய்தியாளர்சந்திப்பில்பேசிய பிரதமர் மோடி,

'தன்னை ஜனாதிபதி ககமே விமான நிலையத்திற்கே நேரில் வந்து வரவேற்றமை ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் கிடைத்த மரியாதையாக கருதுகிறேன். ருவாண்டாவில் இந்திய தூதரகம் திறக்கப்பட உள்ளது. இதனால், பாஸ்போர்ட் மற்றும் விசா பெருவதற்கான வசதிகள் உருவாக்கப்படும். ருவாண்டாவின் பொருளாதாரவளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பும் இருப்பது பெருமை அளிக்கிறது' என குறிப்பிட்டார்.

மேலும், இருநாடுகளுக்கும் இடையே தோல் மற்றும் விவசாயம் ஆராய்ச்சி தொடர்பான முக்கிய ஒப்பந்தங்கள் கையெ முத்தாகின.

மேலும், ருவாண்டா அரசு, 'கிரிங்கா' என்றபெயரில் 'குடும்பத்துக்கு ஒரு பசு' என்றதிட்டத்தை செயல்படுத்துகிறது. இந்த திட்டத்துக்கு இந்தியாவின் சார்பில் இலவசமாக 200 பசுக்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பசுக்களை வழங்குகிறார்.

இந்திய பிரதமர் ஒருவர் ருவாண்டாவுக்குப் பயணம் மேற்கொள்வது இதுவேமுதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது

# ரயிலில் இருந்து விழுந்து 4 பேர் உயிரிழப்பு

## படிக்கட்டில் பயணம் செய்தபோது பரிதாபம்

சென்னையில் நேற்று மின்சார ரயிலில் படிக்கட்டில் தொங்கிக்கொண்டு பயணம் செய்தபோது, தடுப்புச் சுவரில் மோதி விழுந்து 4 பேர் உயிரிழந்தனர்.

சென்னை கடற்கரையில் இருந்து திருமால்பூர் நோக்கி மின்சார விரைவு ரயில் நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றது. இதில் பாடசாலை, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ மாணவிகள், பணிக்கு செல்பவர்கள் ஏராளமானோர் பயணித்தனர். இருக்க இடம் கிடைக்காமல் பலர் படிக்கட்டில் தொங்கிகொண்டு பயணம் செய்தனர்.

இந்தநிலையில், பரங்கிமலை ரயில் நிலையத்தை நெருங்கியபோது, படிக்கட்டில் தொங்கிகொண்டிருந்தவர்கள் அங்கிருந்த ரயில் பாதை அருகில் உள்ள தடுப்புச்சுவரில் மோதி கீழே விழுந்தனர். பலத்த காயமடைந்த அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் பாடசாலை, கல்லூரி மாணவர்கள் உள்பட



4 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். 7 பேர் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேபோல் நேற்றுமுன்தினம் இரவும் பரங்கிமலை ரயில் நிலையத்தில் நிகழ்ந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதசார்பற்ற இயக்கங்களுடன் கூட்டணிக்கு தயார்: தினகரன்!

மதசார்பற்ற இயக்கங்களுடன் கூட்டணிக்கு தயார் என்று டி.டி.வி.தினகரன் கூறியுள்ளார்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழக துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் மேலும் தெரிவிக்கையில் –

எங்களுடன் லோக்சபா உறுப்பினர்கள் யாரும் இல்லை. எனவே மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தது பயத்தினாலா என்று எனக்குத் தெரியாது. சில மாதங்களிலேயே தற்போதைய லோக்சபா முடிகிறது.

அதிகபட்சம் அடுத்த ஏப்ரல், மே மாதங்களுக்குள் தேர்தல் நடக்கும். தேர்தலுக்குப் பிறகு தமிழக மக்களுக்காகப் போராடாத தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் தொகுதிக்குள்ளேயே செல்ல முடியாது.

மக்கள் ஆதரவோடு, மக்களுக்காக போராடிக் கொண்டிருக்கிற அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தான் அடுத்த தேர்தலில் தமிழகத்தில் மாபெரும் வெற்றி



பெறும்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் என்னுடைய நல்ல நண்பர். இதுவரை நாங்கள் கூட்டணி பற்றி பேசவில்லை. அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மக்கள் ஆதரவோடு இருக்கிறது என்பதை உணர்ந்து எங்களோடு எந்த இயக்கங்கள் வந்தாலும் அது மதச்சார்பற்ற இயக்கமாக இருந்தால் அவர்களுடன் நாங்கள் நிச்சயம் கூட்டணி வைக்க தயாராக இருக்கிறோம். நாங்கள் தி.மு.க. வுடன் கூட்டணி வைக்க முடியாது.– என்றும் அவர் கூறியுள்ளார்.

# நாட்டில் நடைபெறும் தாக்குதல் சம்பவங்களுக்கு பா.ஜ.க பொறுப்பேற்க வேண்டும்: மம்தா பானர்ஜி!

நாடு முழுதும் கும்பலாக நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களுக்கு பாரதிய ஜனதா கட்சி தான் பொறுப்பு என மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் ஒரு சிலர் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு அப்பாவி மக்களை கடுமையாக தாக்கிக் கொலை செய்யும் சம்பவங்கள் வட மாநிலங்களில் சர்வ சாதாரணமாக அரங்கேறி வருகின்றன. மேலும், வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரவும் குழந்தை கடத்தல் வதந்திகளை நம்பி பலர் அப்பாவிகளை அடித்துக்கொன்றுள்ளனர்.

இந்தநிலையில், இது குறித்து பேசிய மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி–

நாடுமுழுதும் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு பா.ஜ.க.வினரின் வெறுப்பு பிரசாரம் தான் காரணம். ராஜஸ்தான் மாநிலம் அல்வாரில் பசு குண்டர்களால் ஒருவர் அடித்துக்கொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கு நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால், இம்மாதிரியான சம்பவங்



களில் கண்டனம் தெரிவிப்பதற்கு பதிலாக, அவர்கள் கட்சியில் உள்ள மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரையிலான நிர்வாகிகளை கட்டுப்படுத்தாமல் இருப்பது ஏன்? நாட்டில் நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களுக்கு பா.ஜ.க தான் பொறுப் பேற்க வேண்டும்.

மேற்கு வங்காளத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்று இருந்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும். கும்பலாக நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களில் அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, இதுபோன்ற சம்கபவங்கள் நடைபெறுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும்.– அவர் தெரிவித்தார்.

# எல்லைத்தாண்டியமைக்காக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்

எல்லைத்தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் புதுக்கோட்டை மீனவர்கள் 7 பேர் மற்றும் அவர்களது இரு படகுகளை இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியா – இலங்கை கடல் எல்லையான கச்சத்தீவு அருகே மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை, இலங்கை கடற்படையினர் தாக்குவதும், சிறைபிடிப்பதும் வாடிக்கையாக நடந்து வருகிறது.

அந்த வகையில், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக புதுக்கோட்டை மீனவர்கள் 7 பேர் மற்றும் அவர்களது இரு படகுகளை இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

முன்னதாக, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ராமேஸ்வரம், மண்டபத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள், இரு வாரங்களுக்கு முன்பு விடுதலை செய்யப்பட்ட நிலையில், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

(கு)

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர் வைத்தியர் மயூரதன் தலைமையிலான குழுவினர் நேற்று மேற்கொண்ட அகழ்வின் போதே இந்த எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணி – நாயன்மார்கட்டுப் பகுதியில் நீர்பாசன வேலைத் திட்டத்திற்காக நிலக்கீழ் நீர்த் தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கான வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போதே கடந்த வெள்ளிக்கிழமை ஒரு பகுதியில் மனித எலும்பு எச்சம் வெளித் தெரிந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்தே இது தொடர்பாக அப் பகுதி கிராம சேவையாளர் ஊடாக யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் யாழ்.நீதிமன்றுக்கு அறிக்கையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.நீதிவான் சின்னத்துரை சதீஸ்கரன் குறித்த பகுதியை ஆய்வு செய்யுமாறு உத்தரவிட்டார்.

இதனடிப்படையில் மேற்படி பகுதியில் காணப்பட்ட எலும்பு எச்சங்களை மீட்பதற்காக வைத்தியர் மயூரதன் தலைமையிலான குழுவினர் அப் பகுதிக்கு நேற்றுச் சென்றிருந்தனர்.

யாழ்பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் இந்த அகழ்வு பணி நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது. அப்பணியில் பொலிஸ் தடயவியல் பிரிவினர், யாழ்.மருத்துவ கல்லூரி மாணவர்கள் போன்றோர் பங்குபற்றினர்.

கனரக இயந்திரத்தின் மூலம் மேற்பரப்பு மண் அகழ்ந்தெடுக்கப்பட்ட பின்னர் எலும்பு காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதி மண் வெட்டிகளாலும், சிறு கைக் கரண்டிகளாலும் அகழ்ந்தெடுக்கப்பட்டது. நில மட்டத்தில் இருந்து சுமார் மூன்றரை அடி ஆழத்தில் இந்த எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இதன்போது மனித மண்டையோட்டின் பின் பகுதியின் சில எச்சங்களும், கால் மூட்டின் சில பகுதிகளுமாக குறைந்தளவான எலும்பு எச்சங்களே மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட இவ் எலும்புகள் அது ஆணா, பெண்ணா என்று கண்டறிவதற்கு கூட போதுமானவையாகக் காணப்படவில்லை. மிகவும் உக்கிய நிலையிலும், நீண்ட காலத்திற்கு முன்னர் புதைக்கப்பட்டதாகவுமே இந்த எலும்புகள் காணப்பட்டன.

மேலும் இந்த எலும்புக்கூட்டின் ஏனைய பகுதிகள் நீர்தொட்டி நிர்மாணப் பணிகளுக்காக ஏற்கனவே அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்ணோடு சென்றிருக்கலாம் என்று கருதப்படும் நிலையில் அவற்றின் எஞ்சிய சில எச்சங்களே தற்போது கிடைத்துள்ளன. இவை ஒரு மனிதனுடைய எலும்புகள் மாத்திரமே எனவும் அகழ்வு குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்கப்பட்ட எலும்பு எச்சங்கள் தொடர்பான மருத்துவ ஆய்வுகள் நடத்துவதற்காக அவை அங்கிருந்து எடுத்து செல்லப்பட்டன. ஆய்வுகளின் பின்னரே உறுதியான தகவல்களை வழங்க முடியும் எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பாகவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொது வேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி பகிரங்கப்படுத்தியிருந்தார்.

இதன்போது திஸ்ஸ அத்தநாயக்கவினால் ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களும் ஊடகங்களுக்கு முன்பாக பகிரங்கப்படுத்தப்பட்டன.

எனினும் இவ்வாறு வெளியிடப்பட்ட ஆவணங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டவை என்றும், இவற்றை வெளியிட்டு, இனங்களுக்கு இடையிலான நல்லுறவை பாதிக்கும் வகையில் செயற்பட்டார் எனச் சுட்டிக்காட்டி, திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் சாட்சியாளர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் முன்னிலையாகுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்ட போதிலும் இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் டிலிப் பீரிஸ், ஜனாதிபதியும் பிரதமரும் அவசர அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்றுள்ளமையினால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லையென அறிவித்தார்.

இதனையடுத்து இருவரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுஆராய்ச்சி உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

## சிங்களவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. இந்தக் கருத்தை முடியுமானால் நிரூபிக்குமாறு அவருக்கு சவால் விடுக்கின்றேன் எனக் கம்மன்பில கூறினார்.

## வாள்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில இளைஞர்கள் தம்மை ஐ குழு எனவும் சாவா குழு எனவும் அடையாளப்படுத்தி கொண்டு வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் குழுவினர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் எழுதுமட்டுவாழ் பகுதியில் குழு மோதல் ஒன்றுக்குத் தயாராக வாள்கள், இரும்பு கம்பிகள், பெல்லுகளுடன் 'படி' ரக வாகனத்தில் சென்றுள்ளனர்.

இளைஞர்கள் குழு மோதலுக்குத் தயாராக எழுமட்டுவாழ் பகுதிக்கு வருகின்றது எனும் இரகசியத் தகவல் கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றதை அடுத்து இளைஞர்களை மடக்கிப் பிடிக்க கொடிகாமம் பொலிஸார் எழுமட்டுவாழ் பகுதியில் தயார் நிலையில் இருந்தபோது , பொலிஸாரைக் கண்ட இளைஞர் குழு வாகனத்தில் மருதங்கேணிப் பகுதியூடாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் தப்பிச் செல்லும் பாதையைப் பளைப் பொலிஸாருக்குக் கொடிகாமம் பொலிஸார் அறிவித்ததை அடுத்து , பளைப் பொலிஸார் மருதங்கேணியில் உள்ள பொலிஸ் காவலரணுக்கு அறிவித்துள்ளனர்.

அதனை அடுத்து மருதங்கேணி காவலரணில் தயார் நிலையில் இருந்த பளைப் பொலிஸார் இளைஞர்களின் வாகனத்தை மடக்கிப் பிடித்தனர்.

வாகனத்தில் இருந்த 13 இளைஞர்களையும் கைது செய்தனர். வாகனத்தில் இருந்து வாள்கள் , இரும்புக் கம்பிகள் , பொல்லுகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 13 இளைஞர்களையும் பளை பொலிஸ் நிலையத்தில் தாம் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் கூறினர். (ஐ-7)

## புனரமைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்குத் தெரு பகுதியிலுள்ள குளமொன்று யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் புனரமைக்கப்பட்டு வந்தது. இவ்வாறு குளத்தைப் புனரமைப்பதற்கு நிலத்தை தோண்டிய போது நிலத்திற்குள் இருந்து புகை வெளியே வந்துள்ளது. அத்தோடு குளத்திலிருந்து நாக பாம்பு ஒன்றும் வந்துள்ளது.

கடந்த சில நாள்களாக இக் குளப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் குளத்திலிருந்து புகை வெளியே வந்ததால் அங்கு குளம் புனரமைப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து குளம் புனரமைப்பு பணிகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக கிராம சேவையாளர், பிரதேச செயலகம் மற்றும் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு நேற்றுக் காலை சென்ற மேற்படி தரப்பினர் குளத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

யுத்தத்தால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில் யுத்தம் முடிவடைந்த பின்னரே அங்கு மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். இதனால் அந்தக் குளத்திற்குள் வெடி பொருள்கள் ஏதும் இருக்கலாம் என்றும் அங்குள்ள மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிர்த்தராசன் குளம் கஞ்சித்தாழ்வு ரயில்வே கடவையில் இரவு நேரக் காவலாளியாக கடமையாற்றும் 26 வயதுடைய நடேசன் அருள்நேசன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே, நேற்று இரவு கடமைக்குச் சென்றிருந்த பொழுது ரயிலில் மோதுண்டு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக முருங்கன் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் பதில் நீதவான் இம் மனுவேல் கயஸ் பல்டானோ சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரனையை மேற்கொண்டார். மரணத்துக்கான புலன் விசாரணையை மேற்கொள்ளும்படி பொலிஸாருக்கு அவர் கட்டளை பிறப்பித்தார். சடலம் உடற்கூறாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பலாலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி விமானத் தளக் காணிகள் குறித்து கொழும்பில் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களப் பணிப்பாளருக்குத் தாம் அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே இப்படி முதல்வர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வாறு முதல்வர் ஒரு கடிதத்தை சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளருக்கு அனுப்பிருக்கின்றமை குறித்து முதல்வரின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றின் மூலம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

கொழும்பு சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களப் பணிப்பாளருக்கு (Director, Civil Aviation) வடமாகாண முதலமைச்சரால் பலாலி விமானத் தளக் காணிகையேற்பு சம்பந்தமாகக் கடிதம் ஒன்று 22.06.2018 ஆம் திகதியன்று அனுப்பப்பட்டது.

பிரதமர் சென்ற தடவை வந்த போது மேற்படி காணி கையகப் படுத்துவது சம்பந்தமாக உரிய நிறுவனத்துடன் பேசித் தீர்க்குமாறு கூறியதன் காரணத்தினால்தான் மேற்படி கடிதம் அனுப்பப்பட்டது. அதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

விமானத்தளத்திற்கான காணி முதலில் 1950ஆம் ஆண்டு விமான போக்குவரத்துச் சேவைத் திணைக்களத்தினால் கையேற்கப்பட்டது. மொத்தமாக 456 காணித் துண்டுகள் கையேற்கப்பட்டன. அவற்றின் மொத்த விஸ்தீரணம் 349 ஏக்கர் 3 ரூட்ஸ் 35.9 பேர்ச்ஸ் (141.62 ஹெக்டயர்கள்). அதனுடைய பூர்வாங்க வரைபட இலக்கம் 1579.

அதன் பின் 1986ஆம் ஆண்டில் காணி கையேற்புச் சட்டத்தின் பிரிவு 2இன் கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட காணிகளையும் சேர்த்து மேலதிக காணிகளை பலாலி விமானத் தளவிஸ்தரிப்புக்காக அவசர காலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு கையேற்பதாக அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. குறித்த கையேற்பின் கீழ் அடையாளப்படுத்தப்பட்ட காணி 426 ஏக்கர் 00 ரூட் 32.3 பேர்ச்சஸ் (172.4778 ஹெக்டயர்கள்) விஸ்தீரணம் கொண்டது. இந்தக் காணி முன்னர் குறிப்பிடப்பட்ட 349 ஏக்கர் 3 ரூட் 35.90 பேர்ச்சஸ் காணியையும் அதனுள் அடக்கியிருந்தது.

1987ஆம் ஆண்டில் மேலும் 646 ஏக்கர் 3 ரூட் 24.04 பேர்ச்சஸ் காணி இராணுவத்தால் கையகப்படுத்துவதாக பிரிவு 38(a) இன் கீழ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. பிரிவு 5இன் கீழான அறிவித்தல் 1999ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. ஆகவே கையகப்படுத்தக் கோரப்பட்ட காணிகளின் மொத்த விஸ்தீரணம் 349 ஏக்கர் 3 ரூட்ஸ் 35.90 பேர்ச்சஸ் + 646 ஏக்கர் 3 ரூட்ஸ் 24 பேர்ச்சஸ் = 996 ஏக்கர் 3 ரூட் 19.90 பேர்ச்சஸ்.

இவற்றைவிட மேலும் 6500 ஏக்கர் காணி மேலதிகமாக படையினரால் கையேற்கப்பட்டுள்ளன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கூட பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் பலாலி விமானத் தள விஸ்தரிப்புக்காக மேலதிகக் காணிகையகப்படுத்த முடியாது. ஏனென்றால் அதில் ஒரு பகுதி விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் ஏற்கனவே 1950இல் கையேற்கப்பட்டுவிட்டது. விமானத்தள விஸ்தரிப்புக்கான காணியும் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் தான் கையகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்படி பணிப்பாளருக்கு வடமாகாண முதலமைச்சர் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று அறிவுரை வழங்கியுள்ளார்.

1. மேற்குறிப்பிட்ட 349 ஏக்கர் 3 ரூட் 35.9 பேர்ச்சஸ் காணியை படையினர் உடனேயே விமானப் போக்குவரத்துத் திணைக்களத்திற்குக் கையளிக்க வேண்டும்.

2. மேலதிகமாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் விமானத்தளம் அமைப்பதற்காகக் கையேற்கப்பட்ட காணிகளை உடனேயே பணிப்பாளரிடம் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரவேண்டியது அவசியம்.

3. குறித்த காணிகள் பணிப்பாளரிடம் கையளித்தபின் இந்திய அரசிடம் இருந்து பலாலி விமானத்தளத்தை அமைப்பதற்குத் தேவையான காணி எவ்வளவு என்று அறிந்து அதனைக் கைவசம் வைத்துக்கொண்டு மிகுதிக் காணிகளை காணிச் சொந்தக்காரரிடம் கையளிக்கவேண்டும்.

குறித்த 349 ஏக்கர் 3 ரூட் 35.9 பேர்ச்சஸ் காணிக்கு மேலதிகமாக காணி ஏதும் தேவையாக இருப்பின் அதற்கான கையேற்பு நடவடிக்கைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டும்.

எனவே மூலக் காணி விமானப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு உரித்தாகி இருந்த படியால் மேலதிகக் காணிகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் சட்ட உரித்தும் அந்தத் திணைக்களத்தையே சாரும் என்று பணிப்பாளருக்கு முதல்வர் எடுத்துக்காட்டியுள்ளார்.

படையினர் தற்போது கையகப்படுத்தி வைத்திருக்கும் காணி சட்டத்திற்குப் புறம்பாக கையேற்கப்பட்டவையே என்றும் அவர் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அண்மையில் பிரதம மந்திரியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கா முதலமைச்சரை யாழ்ப்பாணத்தில் சந்தித்தபோது குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அநேக விடயங்கள் தமக்கு இதுவரை காலமும் தெரியாமல் இருந்தது என்பதையும் இப்பொழுது அதற்குரிய நடவடிக்கைகளைத் தாங்கள் எடுப்பார்கள் எனவும் தெரிவித்திருந்தார். – என்று உள்ளது.

## 14 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றின் கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் தற்போது, 51, 52, 55 என மூன்று டிவின்கள் நிலை கொண்டுள்ளன. இவற்றைச் சேர்ந்த சுமார் 14 ஆயிரம் படையினர் தற்போது எனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர்.

கடந்த 2017 மார்ச் மாதம், யாழ். படைகளின் கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்ற பின்னர், யாழ். குடாநாட்டில் இருந்து படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை.

2009ஆம் ஆண்டு போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது, யாழ் குடாநாட்டில் சுமார் 45 ஆயிரம் படையினர் நிலை கொண்டிருந்தனர்.

எனினும், போர் முடிந்து 18 மாதங்களுக்குப் பின்னர், 2010 ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வந்தது.

2014 ஜனவரி மாதம், மேஜர் ஜெனரல் உதய பெரேரா, யாழ். படைகளின் தளபதியாக பொறுப்பேற்ற போது, குடாநாட்டில் படையினரின் எண்ணிக்கை 14,600 ஆக குறைக்கப்பட்டிருந்தது.

2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே, குடாநாட்டில் படையினரின் எண்ணிக்கை 14 ஆயிரமாக குறைக்கப்பட்டு விட்டது. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# கிரிக்கெட் ஆடுவதை நிறுத்தப் போகின்றேன்

## கூறுகிறார் ஹேரத்




கிரிக்கெட் விளையாடுவதை நிறுத்துவதற்கு தாம் தீர்மானித்துள்ளார் என இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் இரண்டாவது இனிங்சில் ஆறு விக்கெட்களை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுத்த பின்னர் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள அணியை வெல்வதும் அந்த அணியுடனான தொடரை வெல்வதும் சிறப்பான விடயம். இதனால் மகிழ்ச்சியடைந்துள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் இந்த தொடரில் சிறப்பாக பந்துவீசினார்கள் என தெரிவித்துள்ள ஹேரத் அனைவரும் ஓய்வு பெறவேண்டிய தருணமொன்று உள்ளது என்பது எனக்கு தெரியும். இதன் காரணமாகவே நான் ஓய்வு பெற தீர்மானித்துவிட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# மெசட் ஓசில் ஓய்வு!

ஜேர்மனி உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான மெசட் ஓசில், சர்வதேச கால் பந்து போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுகிறார் என அறிவித்துள்ளார்.

29 வயதுடைய மத்திய கள வீரரான மெசட் ஓசில், அரசியல் சர்ச்சைக்கு மத்தியில் சிக்கி கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ள நிலையில், விரக்தியுடன் இந்த ஓய்வு அறிவிப்பை , வெளியிட்டுள்ளார்.

தனது துருக்கி பூர்வீகம் காரணமாக அண்மைய மாதங்களில் சர்ச்சைகளுக்கு முகம்கொடுத்த ஒசில், கடந்த மே மாதத்தில், லண்டன் சென்றிருந்தபோது துருக்கி ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகனை சந்தித்திருந்தார். இதன் போது எடுத்துக் கொண்ட புகைப்படமொன்றையும் அவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

இதனால் கடும் விமர்சனத்திற்குள்ளான அவர், ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரின், ஜேர்மனி அணியின் ஆரம்ப பதினொரு வீரர்களில் இருந்தும் நீக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இவ்வாறான ஒட்டுமொத்த அழுத்தங்களினாலும் கடும் நெருக்கடிகுள்ளானஒசில், சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். அத்தோடு தன் மீதான விமர்சனம் குறித்து, சமூக வலைதளத்தில் நீண்ட அறிக்கையொன்றினையும் வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, 'அண்மையசம்பவங்கள்பற்றி அதிகம் சிந்தித்த பின்னரே பாரமான மனதுடன் சர்வதேச அளவில் தொடர்ந்து ஜேர்மனி அணிக்கு விளையாடுவதில்லை என்ற முடிவை எடுத்தேன். நான் இனவாதம் மற்றும் அவமதிப்புக்கு ஆளாவதாக உணர்கிறேன். - என்றார்.

# குற்றச்சாட்டுகளை நிராகரித்தார் தனுஸ்க

இலங்கை கிரிக்கெட்டினால் சகலவகை போட்டிகளில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ள ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஸ்க குணதிலக தான் குற்றம் எதனையும் இழைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தனது ஹோட்டல் அறையில் இடம் பெற்ற பாலியல் வன்முறை சம்பவம் தொடர்பிலேயே தனுஸ்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதனை தெரிவித்துள்ளார்.

தனுஸ்க குணதிலக தன்மீது குற்றமில்லை எனத் தெரிவித்துள்ளார் மேலும் நாங்கள் அவர் குறித்து விசாரணைகளை தொடரப் போவதில்லை என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அணிக்கான விதிமுறைகளை மீறியமை தொடர்பில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விசாரணைகளை மேற்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நோர்வே பெண்ணை




பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய தனுஸ்கவின் நண்பரைக் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளோம்,இதுபிணையில்விட முடியாத குற்றம் எனவும் கொள்ளுப் பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தனுஸ்கவின் நண்பர் இங்கிலாந்தில் கழகமொன்றிற்கு விளையாடுபவர். தனது தந்தையை பார்ப்பதற்காக இலங்கை வந்திருந்தவேளை அவர் இந்தக் குற்றத்தை புரிந்துள்ளார் எனவும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

# தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி சொந்த மண்ணில் சாதித்த இலங்கை




இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இலங்கை அணி 199 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் இரண்டுபோட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, இலங்கை அணி 2:0 என கைப்பற்றியுள்ளது.

கடந்த 2016/2017 கிரிக்கெட் பருவகாலத்தில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில், இலங்கை அணி படு தோல்வியடைந்ததற்கு தற்போது, சொந்த மண்ணில் தொடரை முழுமையாக கைப்பற்றி பதிலடி கொடுத்துள்ளது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, கடந்த 20 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய இலங்கை அணி, முதல் இன்னிங்ஸிற்காக 338 ஓட்டங்களை குவித்தது.

இதன்போது இலங்கை அணி சார்பில், அணியின் அதிகபட்ச ஓட்டமாக தனஞ்சய டி சில்வா 60 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். இதுதவிர தனுஷ்க குணதிலக்க 57 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் கேசவ் மகாராஜ் 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைதொடர்ந்து, பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி 124 ஓட்டங்களுக்கு சுருண்டது.



இதில் தெனாபிரிக்கா அணி சார்பில் டுபிளெஸிஸ் 48 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாக பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் அகில தனஞ்சய 5 விக்கெட்டுகளையும் தில்ருவான் பெரேரா 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

214 ஓட்டங்கள் முன்னிலையில், தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 275 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, ஆட்டத்தினை நிறுத்திக்கொண்டு, தென்னாபிரிக்காவை துடுப்பெடுத்தாட அழைத்தது. இதற்கமைய தென்னாபிரிக்கா அணிக்கு 490 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

குறித்த 490 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்கா அணியால், 290 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் அந்த அணி 199 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

இதன்போது தென்னாபிரிக்கா அணி சார்பில், தியூனிஸ் டி ப்ரைன் 101 ஓட்டங்களையும், டெம்பா பவூமா 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் ரங்கன ஹேரத் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான திமுத் கருணாரத்ன தெரிவு செய்யப்பட்டார்.



40 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக கர்நாடக சங்கீத இசைக் கச்சேரி மேற்கொண்டு புதிய உலக சாதனை படைத்த திரு ஆரூரன் அருணந்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை நேற்று முற்பகல் அவரது அலுவலகத்தில் சந்தித்தார். அருகில் டாக்டர் அனுஷந்தனும் காணப்படுகின்றார்.

# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் கவனிவீர்ப்புப் போராட்டம்






வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிகார துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்து பழைய மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று கல்லூரி முன்றிலில் முன்னெடுத்து இருந்தனர். கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

அமைதி வழியில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் டேவிட் சதானந்தன் சொலமனிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த போராட்டம் தொடர்பில் பழைய மாணவர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இலங்கை அரசமைப்புக்கு அமைய நாடாளுமன்றால் ஒப்புதல் வழங்கப்பட்டு தென்னிந்திய திருச்சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

கல்லூரியின் ஆளுநர் சபைக்கு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பதவி வழியாகத் தலைவராக உள்ளார். அத்துடன், பாடசாலை அதிபர், பழைய மாணவர்களின் பிரதிநிதி, கல்வியாளர்கள் உள்ளிட்டோர் ஆளுநர் சபையின் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஆளுநர் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய யாழ்ப்பாணக் கல்லூரியின் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன.ஆளுநர் சபையின் கீழான நிர்வாகத்துக்கு அமெரிக்காவிலுள்ள கல்லூரியின் தர்மகர்தா சபை நிதியுதவியை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் தற்போது தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா, ஆளுநர் சபையில் ஜனநாயகத்தை பேணாமல் செயற்படுகிறார் என கல்லூரியின் பழைய மாணவர்களாலும் நலன்விரும்பிகளாலும் குற்றஞ் சாட்டப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள தர்மகர்த்தா சபைக்கு இது தொடர்பில் பல மனுக்கள் அனுப்பிவைக்கப்பட்டன. அவற்றை ஆராய்ந்த தர்மகர்த்தா சபை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையிலும் கல்லூரியின் நிர்வாகத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் நோக்கில் ஆளுநர் சபையின் தலைவர் பேராயர் டானியல் தியாகராஜாவும், சபையின் உப தலைவரான சட்டத்தரணி செல்வி விஜுலா அருளானந்தமும் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கை இடம்பெறு வரை கல்லூரிக்கு வழங்கப்படும் நிதியை இடைநிறுத்தவும் தர்மகர்த்தா சபை முடிவு செய்துள்ளது. இதேவேளை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபரின் சுயாதீனத்துக்கும் பதவி நிலைக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் கீழ் நிலைப் பதவிகளில் உள்ள சிலர் அண்மைக்காலமாக செயற்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

தென்னிந்திய திருச்சபைக்கும் அதில் உள்ளவர்களின் தேவைகளுக்கும் அமைய, கல்லூரி அதிபரின் ஒப்புதலின்றி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பொருத்தமற்ற பாடநெறிகளும் ஆளுநர் சபையின் தலைவரால் வழங்கப்படுகின்றன. சிலர் பொறுப்புமிக்க பதவி நிலைகளில் உள்ளபோதும் தமது வியாபாரத்தையும் கல்லூரிக்குள் முன்னெடுக்கின்றனர். ஆசிரியர்கள் சிலர் படப்பிடிப்பாளராகவும் கல்லூரி மாணவர்களை அழைத்து தனியார் கல்வி நிலையத்தையும் நடத்துகின்றனர்.

இந்தச் செயற்பாடுகளை முற்றிலுமாக நிராகரிக்கும் – பாடசாலையின் மீது அக்கறை கொண்ட – சமூகத்தினர், கல்வி, விளையாட்டு, இணைப்பாடவிதனாச்செயற்பாடுகளில் மாணவர்களின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு பல்வேறு அழுத்தங்களை வழங்கி வந்தனர்.எனினும் கல்லூரிச் சமூகத்தின் ஆலோசனைகள், பரிந்துரைகள் ஆளுநர் சபையாலோ நிர்வாகத்தாலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக அதிகார துஷ்பிரயோகங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணக் கல்லூரியின் 150 ஆண்டுகால பாரம்பரியத்தையும் விழுமியங்களையும் பாதுகாப்போம் என பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் இணைந்து இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். – என தெரிவித்தார்.

# கறுப்பு ஜூலை நினைவை ஒட்டி லண்டனில் பெரும் பிரசாரப் பணி




கடந்த 23ஆம் திகதி ஜூலை கலவரத்தின் 35ஆவது வருட நினைவுதினம் லண்டனில் நடைபெற்றது. நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் பிரிட்டன் பிரதமரின் அலுவலகத்திற்கு முன்பாக காலை 11 மணி முதல் நடைபெற்ற நிகழ்வில் கலவரத்தின் போது படுகொலை செய்யப்பட்டவர்களின் உருவப்படங்கள் தங்கியதாக காட்சிப் பதாதைகள் வைக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்குப் பரிந்துரை செய்யும் பிரச்சார பணியும் நடைபெற்றது

இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணனிடம் ஊடகச் செயற்பாட்டாளர் யதுர்சன் சொர்ணலிங்கம் வினவியபோது –

"இருவகையான மனுக்களை இன்று இங்கு வெளியிடுகின்றோம். ஒன்று இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதற்கான ஆதரவு கோருகிறது. மற்றையது மக்களிடமிருந்து ஒரு லட்சம் கையெழுத்து பெற்று நாடாளுமன்றில் இதற்கான விவாதம் கொண்டுவதைக் கோருகிறது. இதனை நாடாளுமன்றின் இணையத்தளத்தில் பதிவு செய்யவேண்டும்."

– என அவர் குறிப்பிட்டமையுடன் அனைத்து மக்களும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கையும் விடுத்தார். (உ)







YARL CITE
BELIEVE TO ACHIEVE
Powered by RATNAM FOUNDATION
CENTRE FOR IT EDUCATION
Job Skills Development & Training

இளஞ்சிறார்களே! 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிந்ததும் தவணை மூன்றைப் பயனுள்ளதாக்குங்கள்.
1
English Language & IT Skills Development & Training
Learn English by developing Listening, Speaking, Reading & Writing Skills Including Vocabulary, Pronuncian & Grammar.
Learn IT by introdusing the Computer Systems, Windows & its Application.
Word Processing, Spread Sheet Management, Digital Drawing & Painting.
Presentation, Publication and the use of Internet & e -mail.
தகவல் தொழில்நுட்பம் செயன்முறை உட்பட அடிப்படையில் இருந்து மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத, வாசிக்க, மற்றும் கேட்கவும் இலகு வழியில் Grammar, Vocabulary& Pronunciation கற்பிக்கப்படும்.





2
உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே! பரீட்சைக்குப் பின்பு உங்கள் நேரத்தைப் பயனுள்ளதாக்குங்கள்.
ICT & Communicative English Language Skill Development & Training
ICT: Basics of computer systems, OS & Applications.
Word processing, Spread sheet management.
Presentation & Publication.
Internet, e-mail & Social media. &
Introduction to: Desktop Publishing & Graphic Designing
Web Designing & Development.
English: Listening, Speaking, Reading & Writing Skills.
Vocabulary, Pronunciation & Grammar.
தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் ஆங்கிலம் ஆகிய கற்கைநெறிகள் செயன்முறைப் பயிற்சியுடன் கூடியதும் NVQ Level 3 இற்கான Syllabus இனை உள்ளடக்கியதும் ஆங்கிலத்தில் NVQ Level 2 இற்கான Syllabus இனை உள்ளடக்கி தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
PHONE: 0212214099 MOBILE: 0772928853, 0702583250.
#125 Main Street, Jaffna. (IOFM Buildings 2nd Floor, near to Courts Complex)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.